www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

ர்ச், 1993. விலை ரூ. 3.



படிப்பகம்

www.padippakam.com

# பொம்மைகள்

துறவீ

இன்னுமா... இன்னுமா
பொம்மை விளையாட்டு!

அறிவை ஆகாரமாய் உண்டு முடித்துப்
பொம்மைகள் துப்பும் எலும்புகளில்
விரோதம் விஸ்வரூபம் எடுக்கிறது.

இவைகளுக்காய் நிர்மாணம் செய்த
சன்னதி இருளில்
கசங்கும் பூக்களோடு
மானுடமும் நசுங்கிப்போகிறது.

இந்தப் பொம்மைகள் துதி பாட,
மனிதன் எழுதிய மந்திரச் சுவடிகளின்
எழுத்துக்கள் தோட்டாக்களாய் மாறி
உயிர்களைத் துளைத்தன.

கீதை ஒரு இந்துவை உருவாக்குகிறது.
பைபிள் ஒரு கிறிஸ்துவனை
உருவாக்குகிறது.
குரான் ஒரு முஸ்லிமை
உருவாக்குகிறது.

இம் மூன்றும் சேர்ந்து
மனிதனை எப்போது உருவாக்குவது?

பொம்மைகள் ஏறிப் புறப்பட்ட
ரதச் சக்கரங்களில் ரணப்பட்டு
சிநேகிதம் ரத்தம் சிந்துகிறது.

பொம்மைகள் கண்டு
அரசாங்கமும் அலறும்.



வாக்குப் பெட்டிகள் கர்ப்பம் தரிக்கும்
பொம்மைகளைப் புணர்ந்து புணர்ந்து.

போதிப்பதாய்க் கிளம்பிய
பொம்மைகளின் பாதையெங்கும்
நீசங்களின் பிரசவம்.

இந்த வெளிச்சங்களும்
தவறு செய்கின்றன
மௌடீக நிழல் விரித்து.

ஒவ்வொரு மனிதனுக்கும்
பொய்முகம் பொருத்திப் பூரிக்கும்
பொம்மைகளின் அரூப விரல்கள்
மானுடத்தின் நெஞ்சக் குழியில்
நஞ்சு தூவும்.

தொடர்ச்சி
பின் அட்டை
உள் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com


# கவிதாசரண்

தமிழில்படைப்பிலக்கிய மாதஇதழ்

மார்ச், 1993

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது.

மனிதநேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:



ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்
சென்னை-600 019.



தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
சந்தாவை M.O. செய்க.

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை 580, T.H.Road, சென்னை-21 இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல் பிரஸ், 31, T.K.S. நகர், சென்னை-19 இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப் பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை யுண்டு.


## PRESS & REGULATION OF BOOKS ACT

Registration of Newspapers (Central) Rules, 1957.
FORM IV (SEE RULE 8) Statement about ownership & other Particulars about Newspaper KAVITHAASARAN

| | |
|---|---|
| 1. Place of Publication: | 580, T.H. Road, Madras-21 |
| 2. Periodicity of its Publication: | Monthly |
| 3. Printer's Name: | Mrs Kavithasaran |
| Nationality: | Indian |
| Address: | 31, T K S Nagar, Madras-19 |
| 4. Publisher's Name: | Kavithaasaran |
| Nationality. | Indian |
| Address: | 31, T K S Nagar, Madras-19 |
| 5. Editor's Name: | Kavithaasaran |
| Nationality: | Indian |
| Address: | 31, T K S Nagar, Madras-19 |
| 6. Name & address of individuals who own the Newspaper: | 1) Kavithaasaran, 31, T K S Nagar, Madras-19<br>2) Mrs. Kavithasaran, 31, T K S Nagar, Madras-19 |

I, KAVITHAASARAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 1 3 1993

Signature of Publisher
(Sd) KAVITHAASARAN

படிப்பகம்

www.padippakam.com

# பெண் எனும் நிலவு

ஆசிரியர் பக்கம்

கண்ணில் ஒளிவிதைத்தாய்;
கருத்தில் உயிர்வளர்த்தாய்;
பெண்ணாய்க் கனிந்துவிட்டேன்;
'போ'வெனப் பொய்த்துவிட்டாய்.

விண்ணில் தவழ்ந்திருக்கும்
வெண்ணிலா தேய்ந்தாலும்
மண்ணில் முடங்கிவிட
வானிறங்கி வருவதில்லை—
பெண்ணிலோர் வெண்ணிலவாய்
பேதைநான் பிறந்தேனோ!
கண்ணிலோர் கடல்வளர்த்து
கனவிலும் துயில்வேனோ!

வண்ணவண்ண நினைவலைகள்
வந்துவந்து போகுமையா.
வாழவந்த வார்த்தையெல்லாம்
வாய்இழந்து ஏங்குமையா.
புண்ணென்று தெரிந்தபின்னும்
கைகள்அதைச் சொரிவதைப்போல்
பொய்என்று தெரிந்தும்உன்னை
பேதைமனம் நாடுமையா.



படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்றபின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.


# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் இரண்டு மார்ச், 1993 இதழ் மூன்று


## அடி, பெண்ணே!

அடி, பெண்ணே!

உன் தேவை என்ன என்பதில் தெளிவாய் இருக்கிறாயா?

உன் வெளிப்பாடு என்ன என்பதை ஒரு தடவையாவது சரி பார்த்ததுண்டா?

உன் தகுதி பற்றிய தர்க்க நியாயங்களில்தான் உன் கோஷங்களைக் கொள்முதல் செய்திருக்கிறாயா?

ஒவ்வொன்றுக்கும் 'ஆம்' என்பதுதான் உன் பதிலானால் அடி, அம்மா, ஒன்று, நான் பதராய் இருக்க வேண்டும்; இல்லை, நீ உவராய் இருக்க வேண்டும்.

இதில் எது மெய்?

ஆனால், இதில் எந்த மெய்யுமே உன்னையும் என்னையும் கண்ணியப்படுத்தப் போவதில்லை.

என்னை உன் மகனாய்ப் பெற்றதில் உன் பங்கு என்ன?
என் மூளையை நிரப்பியதில் உன் ஒத்துழைப்பு எவ்வளவு?
என் மரபணுக்களில் உன் ஆதிக்கம் எத்தனை சதவீதம்?
என் ஆளுமையில் நீ கொண்டாடும் பத்தியதை என்ன?

மானுடச் சந்தையில் என்னிலோர் அன்னியளாய் நீ ஒளிந்துகொள்ளும் போது,

நீ வெறும் மண் என்றே என்னுள் உறைக்கிறாய். ஒரு விதையின் வீரியம் முழுதையும் வெளிப்படுத்தவோ, முடக்கிவிடவோ வல்லமை கொண்ட மண்ணாக மட்டுமே.

விதை மட்டுந்தான் உன்னைப் பிளந்து முளைக்கத் துடிக்கிறது. மற்றவை யாவும் உன்னில் மட்கி மடிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



அப்படித்தானா?

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல' என்றானே உன் பிள்ளை ஒருவன்; அப்படிப்பட்ட நிலம் மட்டுந்தான் நீயா?

'கடல் ஆழத்தையும் அளக்கலாம். ஆனால், பெண்ணின் மன ஆழத்தை அளக்க முடியாது' என்ற மொழி, உன் அறிவாழம் பற்றிய கணிப்பாய் இருக்கும் என்று, உன் அசைவும் செயலும் எனக்கு அறிவுறுத்தவில்லையே, தாயே.

உன் ஐம்புலச் சுவை பற்றிய அற்பச் சிதறலின் மூடுமந்திரம் காட்டும் ஆழமாகவல்லவா பங்கப்படுகிறது!

வானத்தின் நீலம் அதன் ஆழத்தைக் காட்டுகிறது:

அப்படியொரு நீலம் உன் மன ஆழத்துக்கு உண்டா?

எந்த முகாந்திரம் கொண்டு இதை நம்புவது, பெண்ணே?

★

இப்பொழுதெல்லாம் உனக்கு விடுதலை வேண்டும் என்று ஓங்கி முழங்குகிறாய். மெய்யாகவே வேண்டும்தான்.

விடுதலையை அனுபவிப்பது ஒரு மகத்தான மனித சுகம்.

ஆனால், உன் விஷயத்தில் எதிலிருந்து விடுதலை?

அடிமைத் தளையிலிருந்துதான் என்பாய். வாழ்க!

யாரிடமிருந்து? தந்தையிடமிருந்து? தலைவனிடமிருந்து? தனயனிடமிருந்து? ஒட்டுமொத்தமாக எல்லா ஆணிடமிருந்தும்? அப்படியா? பிறகு?

விலங்கு பூட்டும் ஆண்களை விடுத்து, வேறென்ன விலங்குகளோடு வாழ்வதாக உத்தேசம்?

உன் விடுதலை வேட்கை உனது அடையாளம் மறைக்கும் ஆபரணம் இல்லையே?

அடிப்படையில் நீ அறிவார்ந்த நிலையோடு சரியாக இருந்திருந்தால், உன் வயிற்றுப் பிள்ளையே உன்னை அடிமைப்படுத்த அனுமதிப்பாயோ!

ஆழம் ஒரு நீலமாய் உன்னை அங்கீகாரப்படுத்தியிருந்தால், இப்படியொரு முரண்பாடு அரங்கேறியிருக்குமா?

நீ எப்போதும் எதையும் கையேந்திப் பெறுபவள்தானா?

கை நீட்டி எடுத்துக்கொள்ளத் தெரியாதவளோ, அல்லது இயலாதவளோதானா?

அப்படியே உன் கற்பிதம்போல் விடுதலை கிடைத்து விடுவதாகவே இருக்கட்டும்.

என்ன செய்வாய்?

உன் வெற்றியைக் கை நிறைய எடுத்து வந்து உன் கழுத்துப் புருஷனிடமோ, வயிற்றுப் புருஷனிடமோ காணிக்கையாய் வைத்துக் காலில் விழுவாய்தானே!

'வேறு போக்கே இல்லை' என்று உள்ளுக்குள் எப்போ

படிப்பகம்

www.padippakam.com



தும் புலம்பும் உனக்கு, விடுதலை வேட்கை என்பது ஒரு பித்தலாட்டமான நாடகம் இல்லைதானே?

உன்னை நீயே அவமானப்படுத்திக்கொள்ளும் கேவல மாய் இருக்காதுதானே?

உன் மனக் கோணலின் இதமில்லாத புலம்பலாக அதை மாற்றிவிட மாட்டாய்தானே?

அம்மா! அடிமைப்படுத்தக் கற்றுக் கொடுக்கிறவளே நீதான் அல்லவா!

உன் மனக் கோணல்கள் ஊமைப்படும்படியான சில இக் கட்டான சந்தர்ப்பங்களில் மட்டுமே, நீ தாயாய், தாங்குகிற வளாய், தந்து மகிழ்கிறவளாய், கடைசிப் பருக்கை வரை பங்கீடு செய்து கொடுத்துவிட்டு, பசியையே உண்டு நிறைகிற வளாய் மேன் முகம் காட்டுகிறாய். அதிலும் 'உன் வீடு, உன் மக்கள்' என்னும் உறவு காரணமாகவே, 'தான் ஆடாவிட் டாலும் தன் சதையாடும்' என்னும் தாக்கமாகவே பெரும் பாலும் அமைகின்றன.

மழைக்கால மின்னல் கீற்றுகள்போல உன்னிடம் வெளிப் படும் இந்த மேன்மைக் குணத்தை உன் பொதுமைக் குண மாகவே அங்கீகரித்தவர்கள் நாங்கள். சொல், செயல், எழுத்து என்று, எங்களது சிந்தனையின் வெளிப்பாடுகள் அனைத்திலும் அதைப் பதிவு செய்தே மகிழ்ந்திருக்கிறோம். அப்படிப் பதிவதன் மூலமாகவே எங்களை கம்பீரமான புரு ஷர்களாய் வளர்த்துக் கொண்டுள்ளோம்.

ஆனால் நீயோ, எதார்த்தத்தில் எங்களைப் பித்தலாட் டக்காரர்களாய்ச் சிறுமைப்படுத்திவிடக் கங்கணம் பூண்டவ ளாக, மற்ற எல்லா தருணங்களிலும், விதிவிலக்கே இல்லா மல், சிந்தனை விளக்கை அணைத்துக் கருகும் விட்டில் பூச்சி யாய், மணலில் புதைந்துகொள்ளும் மழைத் துளியாய், சில் லறைத்தனங்களின் மொத்தச் செலாவணியாகத்தான் முகம் காட்டுகிறாய். அந்த வக்கிரம் பார்த்தல்லவா உன் பிள்ளை கூட உன்னைக் கட்டுத்தறி விலங்காய்க் கட்ட முயல்கிறான்!

'இது பொய்' என்று சொல்லாதே.

'இதை யோசிக்கவில்லை' என வேண்டுமானால் சொல்.

'தலித், தலித்' என்கிறார்களே; நடைமுறையில் உன் னிலும் ஒரு தலித் உண்டா? ஆனால், உன்னை அப்படி அழைத்துக்கொள்ள ஒரு நாளும் ஒப்ப மாட்டாயே. 'தலித்' என்பது உனக்குத் தகாத வார்த்தையாகப் படுகிறது.

நீ அவரினும் உயர்ந்தவள் என்றொரு அகம்பாவம் படைத்தவளாயிற்றே.

நீ பெற்ற மகன் ஒரு ஒடுக்கப்பட்ட சிறுவனோடு கை கோர்த்துக்கொண்டு வருகிறான். அதைப் பார்த்ததும் என் னமாய்ச் சீறுகிறாய்!

படிப்பகம்

www.padippakam.com



"ஏ, கழிசடை. கையை எடு. பொறுக்கிகளோடெல்லாம் உனக்கென்னடா சகவாசம்?" என்று சாக்கடைச் சொற்களால் உன் வாயை நாற்றப்படுத்திக் கொண்டு, வேற்றுமை உணர்வை இரத்தக் காயமாய்ப் பதிய வைக்கிறவள் நீதானே!

நாள் முழுதும் உழைத்துவிட்டு, பசியோடு தன் கூலியை யாசித்து நிற்கிறான் ஒரு ஏழை. "நாளைக்கு," என்கிறார் உன் தந்தை. "ஐயா, நான் போய்தான் அடுப்பெரியணும்," என்கிறான் அவன். அவனைப் பார்த்து உனக்கு என்னமாய் கோபம் வருகிறது!

"மரியாதை தெரியாத நாய். சட்டம் பேசறான். அடிச்சுத் தொரத்துங்கப்பா," என்று உன் தந்தைக்கு புத்தி சொல்கிறவள்தானே நீ!

பிறர் வீட்டுப் பெண்ணை உன் மருமகளாக்கிக்கொண்டு அவள் பிறந்தகத்தைத் துடிக்கத் துடிக்கத் துடைத்து, அப்படியும் அடங்காமல், அந்தப் பெண்ணையே துடைத்தெறிய ஆக்ரோஷம் கொள்கிறவள்தானே நீ!

வயிற்றுக் கொடுமையால் உன்னிடம் எடுபிடி வேலைக்கு வரும் ஏழைகள் வயிற்றுக்குக் கொடுத்து வேலை வாங்கலாம் எனும் எண்ணமே இல்லாமல், வேலை முடிந்ததும் மயங்கி விழாமல் இருக்க, உன் வீட்டுக் கழுநீரைப் பருகக் கொடுக்கிறவள்தானே நீ!

"இதிலெல்லாம் எங்க வீட்டுத் தடியன்களுக்கு அவ்வளவு ஞானம் போறாது," என்று பகிரங்கப் பிரகடனம் செய்து, பேய்க்கணமாய் ஆடித் தீர்க்கிறவள்தானே நீ!

மாமியாய், நாத்தியாய், சித்தியாய், தலைவியாய் வேடந்தரித்து, உனக்கு நீயே செய்துகொள்ளும் வக்கிரச் சீரழிவில் பத்தில் ஒரு பங்கைக்கூட உன் நாயகனோ, அல்லது உன் சேயவனோ செய்துவிடுவதில்லை என்பதை நீ உணர்கிறாயா?

யாரோடெல்லாம் தோழமை பாராட்டி உன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ள வேண்டுமோ, அவர்களையெல்லாம் சிற்றின மக்களாய்ச் சுட்டிக் காட்டி, மேல் தட்டில் உன்னை வைத்து அலங்கரித்துக் கொள்கிற நீ, உனக்கென்று வரும் போது மட்டும், ஏதோ நாடாள வேண்டிய திரௌபதி மகாராணி, விதி மாறிப்போய் புழுக்கச்சியாய்ச் சீரழிவதாகப் புலம்பித் தீர்க்கிறாயே!

உன்னை ஒரு மாணவியாய்ப் பார்க்க நேர்ந்த போது, நவீனத்தின் பிரதிநிதியை உன்னில் தேடினேன்.

தெரிந்தாய்.

கழுத்திலிருந்து கால் வரை உறை போட்டுக் கொண்டு, நவ நாகரிகத்தை சர்வ அலட்சியமாய் உருவகம் பண்ணிக் காட்டினாய்.

உற்றுப் பார்த்தபோது, உன் காலில் வெள்ளிக் கொலு

படிப்பகம்

www.padippakam.com



சும் கழுத்தில் தங்கச் சரடும் கொஞ்சிப் புரள்வதையும் காண நேர்ந்தது. உன் எந்த நாகரிகமும் இந்த விலங்கிலிருந்து உன்னை மீட்க விடமாட்டாயே.

விளம்பரம் என்னும் பெயரில் உன்னை விசாலமாகக் காட்டுகிறாயே— சுதந்திரமாகத்தானே சோதிக்கிறாய்?

எனக்குப் படுகிறது, நீ விடுதலை என்னும் பெயரில் வேறெதையோ முன்வைக்கத் துடிக்கிறாய் என்று.

பழக்க தோஷத்தால், இன்னும்கூட உன் கோஷங்கள் சில முக்காடுகளைக் களையாமல்தான் வைத்திருக்கின்றன. உன் மக்களே அதைக் களைந்துவிட வேண்டும் என்பதுன் எதிர்பார்ப்பு.

இந்த ரகசிய ஆசைதான் இப்பொழுது உனது நோய்; மருந்தும்கூடத்தான்.

நேற்று வீதி முனையில் மழைக்கு ஒதுங்கி நின்ற இரண்டு பாமரன்கள் பேசிக் கொண்டதைக் கேட்க நேர்ந்தது.

“அடேப்பா! இப்பல்லாம் பொம்பளைங்க ரொம்ப முன்னேறிட்டாங்கப்பா. அவங்க நடையென்ன, உடையென்ன, பேச்சென்ன, வீச்சென்ன!”

“அவ்வளவு முன்னேத்தமா!”

“என்ன மெல்ல கேக்கறே. ஆம்பளங்களே அவுங்களுக்கு இனிமே அனாவசியம்பா. அவ்ளோ மேல போய்ட்டாங்க.”

“அப்படின்னா இனிமே அவுங்க புள்ள பெத்துக்க மாட்டாங்கன்னு சொல்லு. ஆம்பளக்கி மாத்திடுவாங்களோ.”

பாமரப் பேச்சுத்தான் என்றாலும், விஷயத்தின் அடிப் படையே அதுதானோ. ஐயம் என்ன. அதுதான்.

அடி, பெண்ணே! உன் நிலைமை நிதானிக்க வேண்டிய ஒன்றுதான்.

உன் அடிமைத்தனத்தின் முறிச்சீட்டு, பாலியல் பரிணா மம்தானா? இது சதியா, புதிரா.

ஒரு ஆண் மணிக் கணக்கில், நாள் கணக்கில், ஏன்-மாதக் கணக்கில்கூடச் சுற்றிவிட்டு வருவான். அவன் எங்கே சென்றான், என்ன செய்தான் என்பதெல்லாம் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை என்னும் திணவு அவனுக்கு.

ஆனால், நீ ஒரு ஐந்து நிமிஷம் வெளியே போய் வந்தால் அதற்கான விளக்கத்தைக் கேட்காமலே சொல்லியாக வேண் டும்; அதுவும் நம்பும்படியாகச் சொல்லியாக வேண்டும்.

உன் ஒருமைப்பாட்டை ஒவ்வொரு தருணத்திலும் உறு திப் படுத்தியாக வேண்டும்.

பிரச்சினையின் அடித் தளம் இதுதானேடி.

நீ பெற்றுத் தரும் பிள்ளைக்கு ஒரு புருஷன் பெயரில் ‘இனிஷியல்’ தேடுவதுதானே காரணம்.

படிப்பகம்

www.padippakam.com



உன் விடுதலை கோஷத்தில் களையப்படாமல் நழுவத் துடிக்கும் முக்காடும் இதுதானே?

துணிந்தவளுக்குத் துக்கமில்லை: களைந்துவிடு.

உன் பெயருக்குப் பின்னால் புருஷன் பெயரை ஒட்ட வைத்துக்கொள்வதை ஒழித்துக் கட்டு.

மங்கல நாண் என்னும் பெயரில் உன் கழுத்தை நெருக்கும் சுறுக்குக் கயிற்றைக் களைந்துவிடு.

உன் பிள்ளைக்கு எவனிடமும் 'இனிஷியல்' பிச்சை கேட்பதை விட்டொழி.

உன் விடுதலையை எவனிடமும் யாசிக்காதே.

முடிந்தது பிரச்சினை. திருப்திதானே, தாயே?

ஒரு பத்துப் பதினைந்தாயிரம் ஆண்டுகளாக, மனித சிந்தனை விழிப்புற்ற நாளிலிருந்து, நாகரிகச் சாற்றைக் காய்ச்சி எடுத்து, சின்னச் சின்ன வார்த்தை மாத்திரைகளாய்ப் பாடம் செய்து, ஒரு பெரிய அகராதி நிறைய அடைத்து வைத்திருக்கிறானே உன் பிள்ளை; அந்த அகராதியையே அத்து மீறலாகப் புதைத்துவிட வேண்டும்.

இல்லையேல் நீ ஒரு சிறுக்கியாகவும், உன் பிள்ளை ஒரு புறம்போக்காகவும் புரிந்துகொள்ள நேரிடும்.

விலங்குகளுக்கான சுதந்திரம் மனிதர்களுக்குமாக அங்கீகரிக்கப்படும்.

'மனிதன்' என்பதே அவனுக்கொரு கௌரவப் பெயர் தானே. மற்றபடி அவன் ஒரு 'ஆன்மப் பயிர்' என்றா வளர்ந்துவிட்டான்! வெறும் சமூக விலங்காகத்தானே தன்னைக் கடைத்தேற்றிக் கொண்டிருக்கிறான்.

அகராதியைத் தொலைத்துவிட்டால் அவன் நஷ்டப்படுவது 'சமூக விலங்கு' என்பதிலுள்ள 'சமூகம்' மட்டுந்தான்.

நீ வேண்டும் விடுதலையின் பரிமாணம் இதுவா?

அம்மா! நான் அறிந்த உண்மையைச் சொல்கிறேன்:

உனக்கு அறிவில்லை, தாயே.

அறிவின் வெளிப்பாடுதான் மனித ஆளுமையை நிர்ணயிக்கிறது என்பதை அறிவதற்கான அறிவில்லை உனக்கு.

உனக்கென ஒரு சிந்தனை உண்டு; உன் சுய சிந்தனை தான் ஆணோடு உன்னைச் சமப்படுத்தும் என்பதை மறந்து போனாய் மகளே.

ஆணைப் பிரதிபலிக்கும் நாண ரசம் பூசிய கண்ணாடியாகப் பெண்ணானவள் வாழ்ந்து மகிழ்ந்த காலம் ஒன்று உண்டு. அது ஒரு பாவனை சுகம். அந்தச் சுகத்தில் உன்னால் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாமல் போனது எதார்த்தமான விழிப்பு. நீ புடவை உடுத்திக்கொண்டு, உன் நீளமான முந்தானையில் ஆணின் கௌரவத்தை மூடிக்

படிப்பகம்

www.padippakam.com



காத்த வீரை எல்லாம் சரிதான். இன்று உன் ஆடை மாறி விட்டது. அதற்கேற்ப அறிவார்ந்த நடை வந்தாகவேண்டுமே.

ஒன்றை யோசித்துப் பார்.

வஞ்சித்தல், புறம் பேசல், அடுத்துக் கெடுத்தல், கழுத்த றுத்தல், நம்பிக்கைத் துரோகமிழைத்தல், புழுதி வாரித் தூற் றல் போன்ற எல்லா ஈனத் தனங்களிலும் ஆடவனோடு சம மாகப் பங்கு பற்றும் நீ,

சமூகக் கோட்பாடுகளை உருவாக்குவதில் மட்டும் உன் பிள்ளையை முன்னே தள்ளிவிட்டு, நீ பின் தங்கிவிடுகிறாய்.

உன் சமத்துவத்தை நிலைப்படுத்துவதற்கான சமூகப் பொதுக் கருத்தை மேம்படுத்வதில் உனக்கிருக்கும் அலட்சிய மல்லவா, உன் சுயசிந்தனையைத் துருப்பிடிக்க வைத்ததோடு உன் அடிமைத்தனத்துக்கும் பட்டயம் எழுதியது?

சுய சிந்தனை இல்லாத உன் விடுதலை வேட்கை 'தொட் டிக்கோ, துடைச்சுக்கோ' என்னும் பாலியல் குறியீடாய் ஜாடை காட்டும் பட்டுக் குஞ்லமாகத்தான் உன்னை எழுதிக் காட்டும் என்பதை நீ யோசித்ததுண்டா?

'தாய்மை' என்பதில் 'அடிமை' என்பதன் ஓர் எழுத் தைப் பெற்றுள்ளமைக்கு உன் அடி மனத்தில் இரகசியமாய் சம்மதம் இருக்கும் வரை,

'தாங்கப் பிறந்தவள் தழைந்துதான் போக வேண்டும்' என்று நீ சமாதானம் கொள்ளும் வரை,

அறிவும் மனமும் சரி சமமாய்க் கலந்ததோர் ஆழத்தால் உன்னைக் கம்பீரப்படுத்திக் கொள்ளாத வரை,

அணிகளின் அலங்காரத்தில் உன் மயக்கம் தீராத வரை,

பாலியல் பரிணாமச் சாகசம் போன்ற சின்னத்தனங்களி லிருந்து உன் சிந்தனையை மீட்டுக்கொள்ளாத வரை,

ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான சொத்துரிமை என் னும் அரசியல் தீர்வுகூட உன்னைச் சுதந்திரப்படுத்திவிடாது.

உண்மையில் உன்னைச் சுதந்திரமாய் வைத்துக்கொள் ளாத வரை உனக்கு சுதந்திரம் வருவது ஒருபோதும் நிகழாது.

தாயே, என்றும் நீதான் ஊட்டி வளர்க்கிற தாய்.

நீ மனம் வைத்தால் என்னதான் முடியாது?

பெற்றவளை மெச்சத் தெரியும் பிள்ளைகளை வளர்க்க முடியாதா உன்னால்?

பெண்ணடிமை என்பது மனித சரித்திரத்தில் விதி மீறல் தானே தவிர, விதியல்ல. இந்த விதி மீறலும் உன் 'இழப்பில் மகிழும்' அறிமடத்தால் விளைவதன்றி, ஆதிக்கத்தால் அல்ல.

ஆகவே, பெண்மைக் கனிவாய் நீ சரண் படலும், தாய் மையின் ஆளுமைக்கு உன் பிள்ளை சரண்படலும் சமத் துவத் தளத்தில் ஒன்றாய் நிகழச் செய்.

சுதந்திரம் உன் சுவாசமாகட்டும். வாழ்க.

படிப்பகம்

www.padippakam.com

எண்ணி லாத பொருட்குவை தானும்,
ஏற்ற மும், புவி யாட்சியும் ஆங்கே
விண்ணில் ஆதவன் நேர்ந்திடும் ஒளியும்,
வெம்மை யும்பெருந் திண்மையும் அறிவும்
தண்ணி லாவின் அமைதியும் அருளும்,
தருவள் இன்றென தன்னையென் காளி!
மண்ணி லார்க்குந் துயரின்றிச் செய்வேன்,
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்.

தானம் வேள்வி தவங்கல்வி யாவும்
தரணி மீதினில் நிலைபெறச் செய்வேன்;
வானம் மூன்று மழைதரச் செய்வேன்;
மாறி லாத வளங்கள் கொடுப்பேன்;
மானம் வீரியம் ஆண்மைநன் னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்;
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்;
நான்வி ரும்பிய காளி தருவாள்.

*—மகாகவி பாரதியார்*


*விளம்பர உதவி:*

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

- பெருள் போக்குவரத்து சம்பந்தமான
அனைத்து பிரச்சனைகளுக்கும் சுலபமான தீர்வு
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப்
பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர
எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர்!
குறைந்த கட்டணம்... விரைந்த சேவை.

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

10/13-15, காளிங்கராயன் தெரு,
ராம்நகர், கோவை-641009.




படிப்பகம்

www.padippakam.com

தொடர் 3

வல்லிக்கண்ணன்

# நினைவுத் தடங்கள்

டி.கே.சி.யைப் பார்ப்பதற்காக ஒரு நாள் பிற்பகல் மூன்று மணிக்கு நாங்கள் மூவரும்— தி.க.சிவசங்கரன், நான், வேலாயுதம்— திருநெல்வேலி டவுனிலிருந்து புறப்பட்டோம். வண்ணார் பேட்டைக்கு நடந்தே போய்விடலாம். இரண்டு மைல் தூரம் இருக்கும்.

சுவாமி நெல்லையப்பர் ஹைரோடில் (இப்போது 'நெடுஞ் சாலை') நடப்பது என்பதே மனோகரமான அனுபவம்தான். 1940களில் சொல்கிறேன். இப்போது நெடுஞ்சாலையும், சுற்றுப் புறங்களும், திருநெல்வேலி ஜங்ஷனும், அதன் அக்கம்பக்கப் பிரதேசங்களும் மிகப் பெரும் மாறுதல்களைப் பெற்றுள்ளன.

அந்தக் காலத்தில், நெடுஞ்சாலையின் இரு ஓரங்களிலும் ஓங்கி வளர்ந்த பெரிய பெரிய மருத மரங்கள் நின்றன. இரண்டு பக்கங்களிலும் பச்சைப் பசேலென நெல் பயிர் வளர்ந்து நிற்கும் வயல் வெளிகள். இப்போது கட்டிடங்களும் கடைகளும் நெருக்கமாகக் காட்சி தரும் சாலையில் அப்போது இவ்வளவு வாகனங்களின் போக்குவரத்தும் பரபரப்பும் கிடையா.

ஜங்ஷன் வட்டாரம்தான் அசுரத்தனமான வளர்ச்சி பெற்று கண்களையும் மனசையும் உறுத்தக் கூடியதாக இருக்கிறது இந்நாட்களில். 1940களில் அழகும் அமைதியும், மாமரங்கள் வேப்பமரங்கள் நின்ற தோப்புகளும் மலிந்த, பரபரப்பற்ற பிரதேசமாக இருந்தது. இந்து காலேஜ் வளாகத்தை ஒட்டிய மதுரை ரோடு, மருத மரங்கள் நிறைந்த குளுகுளு சாலையாகத்தான் இருந்தது அப்போது. இந்நாட்களில் அது ஜன நெரிசலும், கடைகளும், பஸ் நிலையமும், நாகரிகக் கடை வீதிகளும், மேம் பாலமும் நெருக்கமாகக் காணப்படும் இடைஞ்சல்கள் நிறைந்த பகுதியாக விளங்குகிறது.

வண்ணார்பேட்டைக்கு, ஜங்ஷனிலிருந்து நடந்து, கொக்கிரகுளம் ஆற்றுப் பாலம் கடந்து, அழகியசாலை வழியாகவும் போகலாம். ஜங்ஷனை அடுத்த சிந்துபூந்துறை வழியே ஆற்றுக்குப் போய், தாமிரவருணியை இறங்கிக் கடந்து, அக்கரை ஊரான வண்ணார்பேட்டையை அடையவும் முடியும்.

நாங்கள் சிந்துபூந்துறை வழி போய் ஆற்றில் இறங்கி அக்கரை சேர்ந்தோம். அந்நாட்களில் ஜங்ஷன் தனி வட்டாரமாக

படிப்பகம்

www.padippakam.com



வும், சிந்துபூந்துறை விலகி அமைதியில் ஆழ்ந்திருந்த தனியான சிற்றூராகவும் தென்பட்டன. இப்போது ஜங்ஷன் கடை வீதி யின் வளர்ச்சிகளும், நவநாகரிக லாட்ஜுகளும் சேர்ந்து, சிந்து பூந்துறையும் ஜங்ஷனின் ஒரு அங்கமாகவே மாறிக் காணப்படு கிறது.

நாங்கள் போனபோது மாலை மணி 4 இருக்கும். பெரிய வீட்டில், ஒரு பக்கத்தில், ஈசிச்சேரில் ஓய்வாகச் சாய்ந்திருந்தார் டி. கே. சி.

எஸ் வி எஸ் என்று நன்கு தெரிய வந்துள்ள எஸ். வேங்கட சுப்பிரமணியன் அக்காலத்தில் டி. கே. சி. யின் உதவியாளராக செயலாற்றிக் கொண்டிருந்தார். முன்னறையில், முகமலர்ச்சி யோடு எங்களை வரவேற்ற அவர் எங்களின் விருப்பத்தை அறிந்து கொண்டு டி.கே.சி. யிடம் போய் தெரிவித்தார். பிறகு எங் களை அவரிடம் அழைத்துப் போனார்.

நாங்கள் மூவரும் 'பையன்கள்'தான் அப்போது. தனித் தன்மை எதுவும் பெற்றிராத சாதாரணர்கள். ஆயினும் ரசிக மணி முன்பே பழகியவர்கள் போல மலர்ந்த முகத்தோடு எங் களை வரவேற்று உபசரித்து உட்காரச் செய்தார். எங்களைப் பற்றி விசாரித்தார். பத்திரிகைகள், புத்தகங்கள், கவிதைகள் பற்றி அவருக்கே இயல்பான விதத்தில் ரசமாகப் பேசினார்.

'இதயஒலி' என்ற அவருடைய கட்டுரைகளின் தொகுப்பு அப்போதுதான் புதிதாக வந்திருந்தது. அந்தப் புதுப் புத்தகத்தை எடுத்து வரச் செய்து, அதிலிருந்து கம்பராமாயணப் பாடல்கள், நந்திக் கலம்பகம், முத்தொள்ளாயிரம் கவிதைகளை எல்லாம் பாவத்தோடு பாடி, விளக்கங்கள் சொல்லி, தானும் ரசித்து எங் களையும் ரசித்து மகிழும்படி செய்தார்.

முருகிச் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல்மடவீர்
செம்பொற் கபாடம் திறமினோ!

என்ற வரிகளில் பொதிந்து கிடக்கும் நயத்தை அற்புதமாக அனு பவித்து, எங்களுக்கும் எடுத்துச் சொன்னார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் 'சக்தி' மாத இதழில் ஒரு கட்டுரை வந்திருந்தது. அதற்கு முந்திய இதழ் ஒன்றில் டி. கே. சி. கட் டுரை பிரசுரமாகியிருந்தது.

ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்ப...

என்று தொடங்கும் ஒரு பழம் பாடல் பற்றி— புலவர் ஒருவர் வீட்டில் நிலவிய வறுமையைச் சித்திரிக்கும் கவிதை— டி.கே.சி. எழுதியிருந்தார். அவருடைய வழக்கப்படி பாடலில் திருத்தங்கள்

படிப்பகம்

www.padippakam.com



செய்து வெளியிட்டிருந்தார்.

அந்தத் திருத்தங்கள் சரியில்லை; பாடலின் பூர்வ வரிகளே மிகப் பொருத்தமானவை; பொருள் பொதிந்த வார்த்தைகளைக் கொண்டவை என்று ஒரு அறிஞர் மறுப்புக் கட்டுரை எழுதி, அதுவும் 'சக்தி'யில் வந்திருந்தது.

அக்கட்டுரை பற்றிச் சொன்னேன்.

'ஆ, அதைப் படித்தீர்களா? அதை எழுதியது யார் என்று பார்த்தீர்களா? ஒரு எம். ஏ... எம். ஏ. என்றால் மூளை அற்றவன், சுய அறிவை இழந்துவிட்டவன் என்று அர்த்தம். ஆழ்ந்து சிந்திக்கத் தெரியாதவன் என்று பொருள்' என்று உற்சாகமாகக் குறிப்பிட்டார் டி. கே. சி.

பண்டிதர்கள், பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு பற்றி காரசாரமாகப் பேசினார் தொடர்ந்து. இவை எல்லாம் அவருக்குப் பிடிக்காத விஷயங்கள். தற்காலக் கல்வி முறை, பள்ளிப் படிப்பு, பண்டிதர்கள், பட்டதாரிகள் பற்றி எல்லாம் கண்டனமாகவும் கிண்டல் (பரிகாசம்) தொனியிலும் ரசிகமணி கட்டுரைகள் எழுதியிருக்கிறார். நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களிலும் குறிப்பிடுவது அவர் வழக்கம்,

இந்த ரீதியில் சுமார் இரண்டு மணி நேரம் உரையாடிவிட்டு நாங்கள் விடை பெற்றுப் புறப்பட்டோம். திரும்பிய போது, வண்ணார்பேட்டை சாலை வழி வந்து, ஆற்றுப் பாலத்தின் மீது நடந்து ஜங்ஷன் சேர்ந்தோம்.

எங்களையும் சமமாக ஏற்று, கருத்துக்கள் பற்றி நீண்ட நேரம் ரசிகமணி டி. கே. சி. உரையாடிக் கொண்டிருந்தது அவருடைய உயர் பண்பாட்டையும் பெரிய மனிதத் தன்மையையும் புலப்படுத்தியது.

அதற்குப் பிறகு டி. கே. சி.யை சந்திக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை.

டி. கே. சி.யும் வ. ரா.வும் நவீன தமிழ் வளர்ச்சியை ஆதரித்தார்கள். தமிழின் வளமான வளர்சிக்குத் தமிழ்ப் பண்டிதர்களும் பள்ளிப் படிப்பும் குறுக்கே நிற்பதாகக் குறை கூறி வன்மையாகக் கண்டித்து வந்தார்கள்.

அதே அளவு வன்மையுடன், தற்காலத் தமிழ் வளர்ச்சியையும், தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களையும் குறை கூறியும் கண்டித்தும் பேசி மகிழ்ந்த தமிழறிஞர் ஒருவர் இருந்தார். அவர்தான் 'சொல்லின் செல்வர்' ரா. பி. சேதுப்பிள்ளை.

மறுமலர்ச்சி பேரிலும், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் மீதும் சேதுப் பிள்ளைக்கு இருந்த வெறுப்பையும் ஆத்திரத்தையும் அறியக் கூடிய சந்தர்ப்பம் வாய்த்தது எனக்கு. —வளரும்

படிப்பகம்

www.padippakam.com

# குரு

சகாரா

ஆசிரியர் ராஜகுருவுக்கு மனைவியின் யோசனையை ஒப்புக்கொள்ள முடியாமல் மனம் சலித்தது. ஓய்வூதியத்தில் ஓடும் வண்டி. மகன் இன்னும் வேலையில்லாதோரின் நீண்ட வரிசையில். ரிடையர் ஆனபோது கிடைத்த பணத்தில் மகள் மாலதியை ஒரு வழியாக அனுப்பியாகிவிட்டது. இப்போது சீமந்தம். அதற்குத்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

ஆசிரியர் ராஜகுருவைத் தெரியாதோர் இருக்க முடியாது. பொதுநலச் சேவையில் இறங்கும் 'கெட்ட பழக்கம்' உள்ளவர்.

''அதான் ஊர்க்காரியம்னா லோலோன்னு அலைவீங்களே. யார்ட்டயாவது கடன் கேக்கலாமில்லே?''

மனைவி எளிதாகச் சொல்லிவிட்டாள். அவர் கேட்க வேண்டுமே.

''எங்கிட்ட படிச்ச அவன் அப்படி இருக்கான், இவன் இப்படி இருக்கான்னு அடிக்கடி பொளந்து தள்ளுவீங்களே. அவங்ககிட்டயாவது கேக்கலாமில்லே?''

''பெத்த புள்ளக்கிட்டக் கேக்கலாண்டி. ஆனா சுத்துக்கிட்ட பையன்கிட்ட கேக்கறது பெரிய கேவலம்.''

''உங்க கூடப் பேசி ஜெயிக்க முடியுமா?''

அதற்கு மேல் பேசிப் பயனில்லை. மீனாட்சி எழுந்து உள்ளே சென்றாள்.

எத்தனையோ பேருக்கு வேலை வாங்கித் தர முன்வந்தவர் தன் மகனுக்காக ஒரு நிமிடத்தைக்கூட செலவிட விரும்பவில்லை.

''அவனாவே முட்டி மோதி முன்னுக்கு வரணும். அப்பத்தான் வாழ்க்கைன்னா என்னான்னு தெரியும்.''

ஒரே யோசனையாயிருந்தது. கழுத்திலிருந்த துண்டு அப்படியே பாம்பாக மாறி இறுக்குவது போன்ற உணர்வு. யாரோ உச்சியிலிருந்த ஓரிரு ரோமத்தையும்களைந்தெறிவது போன்றிருந்தது. ஒருபுறம் கௌரவம். மறுபுறம் மகளின் வாழ்க்கை.

''ராஜனைப் போய் பார்க்லாமா?''



''உள்ளே வாங்க சார். அவர் இப்ப வந்திடுவார்.'' ராஜனின் மனைவி அமரச் சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

ராஜன் அவரிடம் படித்தவன். இப்போது ஏதோ தனியார் கம்பெனியில் மேனேஜர் வேலை. நல்ல வரும்படி. கலர் டி. வி. ஷோஃபா ஆகியன பணக்காரத் தனத்தைக் காட்டிக் கொடுத்தன. ராஜகுருவுக்கு மனம் கூசியது. எழுந்து போய் விடலாமா?

பாத்ரூம் சென்றிருந்த ராஜன் வந்தான். கழுத்தில் செயின். வயிறு லேசாக முன்னேறியிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



''என்ன சார் அப்படிப் பாக்கறீங்க? என்னைக்கிருந்தாலும் நான் உங்க ராஜன் தான்.''

''அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி மதுரையில உங்களைப் பாத்தப்ப அட்ரஸ் கொடுத்தேனே. ஏன் சார் வரல்ல?'' பொய்க் கோபம் காட்டினான்.

''இல்லப்பா. நேரங் கெடைக்கல. அப்புறம் கம்பெனில உன்னை வேற எங்கயாவது மாத்தியிருப்பாங்களோன்னு...''

அவனுக்குத் தெரியும் அவர் எப்படிப்பட்டவர் என்று.

''வீட்ல அம்மா, கொழந்தைங்க எல்லாம் நல்லாருக்காங்கல்ல? மணி, சாருக்கு மோர் கொண்டா. மோருன்னா எங்க சாருக்கு ரொம்பப் பிடிக்கும்.''

''என்ன மறக்காம, என்ன பிடிக்குங்கறதும் ஞாபகம் வச்சிருக்கியே.'' ராஜகுரு ஆச்சரியப் பட்டார்.

''உங்கள எப்படி சார் மறக்க முடியும்? ஏதாவதொரு பிராபளத்த சந்திக்கும் போதெல்லாம் உங்களையும் உங்க டீச்சிங்கையும் நெனைச்சுக்குவேன். ரியலி யூ ஆர் கிரேட்.'' அவன் கண்களில் ஏதோ மினுமினுப்பது தெரிந்தது.

'சட்டி பானை செஞ்சு கொடுக்கற மாதிரி வாழ்க்கைய யாருக்கும் செஞ்சு கொடுக்க முடியாது. வழிகாட்டத்தான் முடியும். அததான் நான் செஞ்சேன். நான் ஒன்னும் பெருசா செஞ்சுடல' என்பதுபோல் பார்த்தார்.

ராஜனுக்கு இள ஞாபகங் வந்தன.

ராஜகுரு என்றாலே குலைக்கிற நாயும் திரும்பிப் பார்த்து விட்டு சுருட்டிக் கொள்ளும். அனைத்து மாணவர்களும் மரியாதையாக நடப்பார்கள். அவரது நடையைவிட வார்த்தையில் மிடுக்கு இருந்தது.

ராஜன் புதிதாகச் சேர்ந்திருந்தான். ஒன்பதாம் வகுப்பு படிக்கும் அவனிடம் மாணவர்கள் நிறைய சொல்லியிருந்தார்கள். அவனுக்கென்னவோ மற்றவர்கள் வீணாகப் பயப்படுவதாகத் தோன்றியது.

ஒருநாள் மதியத்திற்குமேல் பள்ளிக்குச் செல்லாமல் 'கட்' அடித்துவிட்டுப் படம் பார்க்கச் சென்றுவிட்டான். மறுநாள் வகுப்பில் ராஜகுரு எதுவும் கேட்கவில்லை. பாட வேளை முடிந்து போகும் போது ஸ்டாஃப் ரூமுக்கு வரச்சொல்லி விட்டுச் சென்றார்.

''இன்னிக்குச் செமத்தியா உழப்போவுது'' எனச் சக மாணவர்கள் பயமுறுத்தினர். ராஜனுக்கு என்னவோ போலிருந்தது.

★

''ஆமா, நேத்து எங்க போயிருந்த?''

''அம்மாவுக்கு ஒடம்பு சவுரியமில்லை... அதான்......''

''நீ போய் பஞ்சு மெடிக்கல்ஸ்ல டேப்லெட்ஸ் வாங்கிக் கொடுத்து பக்கத்துலேயே இருந்து கவனிச்சுக்கிட்டியாக்கும்?''

அவனுக்குள் சற்றே ஆட்டங் கண்டது.

''ஆ...ஆமா சார்.'' தொண்டை வறண்டது

''அரிச்சந்திரன் எதுக்காக தன்னோட சொத்து, பெத்த பையன், தொட்டுத் தாலி கட்டின பெண்டாட்டி அத்தனையும் எழந்தான்னு தெரியுமா?''

''.........''

படிப்பகம்

www.padippakam.com



''என்ன முழிக்கிற? அடிச்சுப்போடுவேன்னு பயப்படுறியா? இல்ல அடிச்சா, வாத்தியாரு தனியாப் போகும் போது கல்லவுட்டு எறியாலாம்னு யோசன பன்றியா?''

அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''சார்... வந்து...''

''இங்க வாடா.''

அவனுக்கு அச்சம்.

''அந்த ஜன்னல கொஞ்சம் எட்டிப் பாரு.''

மதியம் ஒருமணி என்றதும் பள்ளி வாசலில் ஆஜராகும் வெள்ளிமலைக் கிறுக்கன் வீடு வீடாகச் சென்று கொண்டிருந்தான். சொறி நாயொன்று பின்னாலேயே ஓடியது.

அவனுக்குக் குமட்டியது. கையில் திருவோட்டோடு வீடு வீடாக கையேந்திச் செல்வது போல் கற்பனை செய்து பார்த்தான். அருவருப்பாயிருந்தது.

''என்ன? வெக்கம், மானம் ரோசம், சூடு, சொரணை, உன்னோட கௌரவம், அதுக்கும் மேல உன்னோட அந்தஸ்து இதெல்லாம் இந்நேரம் உன் கண் முன்னாடி நிக்கனுமே?''

அவன் எதுவும் பேசவில்லை. தலை குனிந்தான்.

''ஒரு பிச்சைக்காரனா கற்பன கூடப் பண்ணிப் பாக்க முடியிலே. நீ, நாளைக்கு ஒரு பிச்சக்காரனாவே மாறிட்டா? தெரு நாய் மாதிரி கழுவி ஊத்தற பருக்கைக்காகவும் வீட்டு வாசல்ல நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு நிக்கனும்.''

தலைக்கு மேலே ஃபேன், காற்றைச் சூடேற்றிக் கொண்டு சுற்றியது. ஜன்னலை யாரோ அறைந்து அறைந்து திறப்பது போலிருந்தது. ''நான் ஒரு பிச்சைக்காரனில்லை,'' எனக் கத்த வேண்டும் போலிருந்தது.

''நீ நெனச்சின்னாக் கூட உன்னால பிச்சைக்காரனா ஆக முடியாதுங்கறது எனக்குத் தெரியும்.''

''... ...''

''ஆனா, நான் நெனச்சன்னா உன்னைப் பிச்சைக்காரனா ஆக்கிக் காட்ட முடியும்.''

''........''

'ஆனா, நான் அத விரும்பல.'

ஆசிரியர்களது கையில் எவ்வளவு பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிந்தது. ஆக்கலும் அழித்தலும் ஆசிரியர்களிடமே உள்ளதாகப்பட்டது.

★

''நீங்க அடிக்கடி சொல்விங்களே சார். 'எதுக்காகவும் ஏங்காதே; யார் கிட்டையும் கை ஏந்தாதே; சொந்தக் கால்ல நில்லு'ன்னு. அந்த வார்த்தைகள் இன்னும் என் காதுல ஒலிச்சுக்கிட்டே இருக்கு......''

ராஜகுரு எதுவும் பேசவில்லை. அவருடைய வார்த்தைகள் அவரையே கட்டின.

''சொந்தக் கால்ல நில்லு.''

நாக்கு செத்துப் போயிருந்தது.

''என்ன சார் அப்படியே ஒக்காந்துட்டீங்க?''

''இல்லே, இங்க ஒரு நண்பனைப் பார்க்கலாம்னு வந்தேன். உன் ஞாபகம் வந்தது. மொதல்ல உன்னைப் பாத்துட்டு அப்படியே அவனையும் பாத்துடலாம்னு இருந்தேன். லேட்டாயிடுச்சி. சரி அவன் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பான். வரட்டுமா?''

''அரிச்சந்திரன் எதுக்காக தன்னோட சொத்து, பெத்த புள்ள, தொட்டுத் தாலி கட்டின பெண்டாட்டி அத்தனையும் எழந்தான்னு தெரியுமா?'' என்று அவன் அவரைக் கேட்கவில்லை. ●

www.padippakam.com



# ஹைகூ முருகியல்

நெல்லை சு. முத்து

''தத்வமசி தத்வமசி நீயே அஃதாம்'' என்று பாரதி காட்டும் அத்வைத நிலையே ஹைகூ கவிமனம். ''அதுவே நீ'' என்று உணரும் ஒருங்கிணைவு.

குயில் அழைத்தது
அடடே, மூங்கிற் புதர்களில்
நிலவுச் சுடர் விளக்குகள்.

என்கிறார் ஸாய் காகு. இந்தக் கவி நெஞ்ச ஒன்றிப்பு மனோ பாவம் ஹைகூவில் முக்கியம்.

பனி விழும் காலை
நான் வெறுத்த அக்கருங்காக்கை
அடடே, என்ன அழகு!

ஜப்பானியக் கவி பாஷோவின் வியப்பு இது பின்னர் இந்த அடடா, அடடே என்கிற சரிய அதிர்வுகள் தமிழ்க் கவி ஞரிடை ஒருவித அலங்கார மாயிற்று எனலாம்!



## அழகின் ஆராதிப்பு

உடைந்த வளையல் துண்டு
குளத்தில் எறிந்தேன்
அடடே, எத்தனை வளையல்கள்!
(புல்லின் நுனியில் பனித்துளி)

என்கிறார் அறிவுமதி.

விழுந்து நொறுங்கியது
முகம் பார்க்கும் கண்ணாடி.
எத்தனை முகங்கள் தரையில்!
(கவிதாசரண், ஜனவரி92)

என்று கவிஞர் துறவி தமது 'மூக்குத்திப்பூ' ஹைகூவில் அதிசயிக்கிறார்.

வெளிச்சம் விளைக்கும் சூரியனுக்கு
எத்தனை விரல்கள்... அடடே...
எல்லாப் பக்கமும் கவிதைகள்.
(புள்ளிப்பூக்கள்)

என்றும்,

எத்துணை பெருந்தன்மை
தன்னையே தரும் முழுமையாய்
அடடா, வெள்ளைத் தாள்.
(காற்றின் கைகள்)

என்றும் பாடும் அமுதபாரதி,

உலக அழுக்குகளால்
வெறுப்புற்று உள்ளாழ்ந்தால்
அடடா!
எத்துணை அழுக்கு மனம்.

என்றும் 5-7-5 அசைக் கவிதை மீட்டுகிறார்.

சித்திரக் கவி தீட்டுவதில் மித்ரா அதிக நாட்டம் உடையவராய்,

மின் கம்பிகளில்
பறவைகள் பறவைகள்
அடடே! நல்ல ஹைகூ.

நதிகளைத் தாண்டிப் போகும்
எறும்பு அடடே!
எருக்கம் பூ விமானம்.

தண்ணீருக்குள்ளும் அடடே
மின்மினிகள்! மின்மினிகள்!
மீன் கிழித்த உப்பனாறு.

என்றெல்லாம் ''ஹைகூ கவிதைகள்'' புனைகின்றார். வாழ்வியலோடு ஒட்டிய குறியீடான எறும்புக் கடியும் பொறுத்துக் கொள்கிறார்.

மொய்க்கும் கடிக்கும் விலகும்

படிப்பகம்

www.padippakam.com



அடடே, சொந்தங்கள்தாம்
எறும்புகள்.

இன்னொரு இடத்தில்,

ஆழ்ந்த தூக்கம்
கனவில் நீ
மோசமான எறும்பு.

என்கிற இவரது ஹைகூ அப்துல் ரகுமானின் முதல் சிந்தர் பாத் தாக்கம் மாதிரி அமைகிறது.

இரவெல்லாம்
உன் நினைவுகள்
கொசுக்கள். (பால்வீதி)

உறங்கும் வீணை உறையில்
ஆலாபனைக்கு ஆயத்தமாயின
அந்தி நேரக் கொசுக்கள்.
(சுபமங்களா, மார்ச்1992)

என்பது சிற்பியின் ஹைகூ.

கொசு வலைக்குள் ஒரு
கொசு... அடடே!
மனச் சாட்சி.

என்கிறது அறிவுமதி ஹைகூ.

தூக்கத்தை வசூலித்து
யார் கேட்டது காதுக்குள்
உங்கள் காதல் பாட்டை?
(இலையுதிர் காலம் நிரந்தரமல்ல

என்று கொசுக்களிடம் பேசுகிறார் பரிமளமுத்து.

## மறை பொருள் ஹைகூவாகாது

'நிகழ் காலமே ஹைகூ அனுபவத்தின் அடிப்படை' என்பார் ஆங்கில அறிஞர் ஜேம்ஸ் ஹாக்கெட்.

வாழ்த்துக்கள் இல்லையா!
இவ்வாண்டும் உயிர்வாழ்வாய்
கொசுக்களுக்கு உணவூட்ட.

என்று ஜப்பானிய கவி இஸ்ஸாவும்,

இலையுதிர் கொசுக்களே
பாடுங்கள் கடியுங்கள்—நான்
நெடுநாளாய்ச் சாவுக்குத் தயார்

என்று ஷிகியும் பாடிய யதார்த்த ஹைகூக்கள் போல தமிழ் கவிஞர்களிடையும் வெவ்வேறு கருத்தோட்டம் எழுந்தது.

கொசுக்களை விரட்டியோட்ட
மின்விசிறி போட்டேன். எனக்கே
தாங்கவில்லை குளிர்.
(காற்றின் கைகள்)

எனவும்,

கவிதை எழுதுவதை நிறுத்தினேன்
கையில் வந்து அமர்ந்தது
பசித்த கொசு.
(ஹைகூ கவிதைகள்)

எனவும்,

முன்புறம் விசிறி
முதுகுப்புறம் அதிரடித் தாக்குதல்
கொரில்லாக் கொசுக்கள்.
(வைரப் படிகங்கள்)

எனவும் வெளியான ஹைகூகளுக்கு அனுபவ நேர்த்தி ஒரு காரணம்.

ஆயினும் அதற்காக விளக்குச் சுடரில் விழுந்து மடியும் விட்டில் காட்சிக்கு ஆன்மீகக் குறியிட்டுப் பொருளூட்டுதல் பழஞ்சாண் விஷயம்.

அட கதையே,
வ்ளக்குப் பூச்சியா
மாய்வதற்கு உதாரணம்!
(தீக்குளி)

என்பார் ந. பிச்சமூர்த்தி.

தமிழில் இத்தகைய சில ஹைகூ விட்டில்கள் இன்றை நவீன சிந்தனைச் சுடரில் விழுந்து மடிந்தவையே.

''மெழுகுவர்த்தியின் தீக்
குளிப்பை
அணைக்க வந்தவையே
அணைந்தன
ஐயகோ விட்டில்கள்.''
(புள்ளிப்பூக்கள்)

''மறுபடியும் விட்டிலுக்காய்

www.padippakam.com



மேனியெல்லாம் உருகி வழியும்
எரியும் மெழுகுவர்த்தி.''
(காற்றின் கைகள்)

இதே கருத்தோட்டத்தில் 'சூப்பர் நியூஸ்' இதழ் ஒன்றில் (மார்ச்சு 20– ஏப்ரல் 4, 1991) வளைகுடாப் போர் விளைவு ஹைகூவானது இப்படி:

''விளக்கு எரிந்தது
எண்ணெய் குறைந்தது
விட்டில் பூச்சிகள் செத்து
மடிந்தன.''

என்று எழுதினார் பெருந்துறை சிவகவி காளிதாசன் எனும் வாசகர்.

எப்படியோ சுடரில் மடிந்து சாகும் விட்டில்களுக்கு இரங்கும் மனோ பாவம் இன்றைய ஹைகூ எழுத்தாளரிடம் சிக்கியது உண்மை.

இதற்கிடையில்,

''முட்டி முட்டிப் பால்
குடிக்கின்றன.''
நீலக்குழல் விளக்கில்
விட்டில் பூச்சிகள்.''

எனும் பாலகுமாரனின் 'விட்டில் பூச்சிகள்' அருமை.

''விடியலா மரணம் தரும்?
விளக்கின் சுடரே,
உன்னைத்தான்
பாவம், ஓ விட்டில்கள்.''
(காற்றின் கைகள்)

''விளக்கை அணைத்தேன்
விடுதலை பெற்ற
விட்டில்கள்.''
(சூரியச்செதில்கள்)

''இன்று மட்டும்
இருட்டில் இருக்கலாம்
விட்டில் பாவம்.''
(தீயின் பிணம்)

இவை தவிர,

''வழியேது
வண்டிக்குள் வந்துவிட்ட
விட்டிலுக்கு.''
(கணையாழி மார்ச் 1991)

என்கிறார் இலக்குமி குமாரன் ஞான திரவியம் எனும் வாசகர்.

இத்தகைய ஒரு பொருள் குறித்த ஒருபோக்கான, ஒரு படித்தான சிந்தனை ஹைகூவில் இனி விளைச்சல் தராது என்று மட்டும் குறிப்பிடலாம்.

பெரும்பாலான கவிஞர்களிலிருந்து மாறுபட்டதோர் எதிரோட்டம் பரிமளமுத்துவிடம்.

''விட்டில்கள் சாகும்
விளக்கில் மோதி; விளக்கெப்
போ சாகும்
விட்டில்கள் ஊதி.''
(இலையுதிர்காலம்நிரந்தரமல்ல)

அழகியல் உணர்வு தலைதூக்கும் பொழுது துன்பத்திலும் இன்பமே நெஞ்சைத் தொடும். கவிஞர் சிற்பியின் ஹைகூ இது.

''இறைந்து உறுமிற்று புயல்
வீடும் இடிகிறது
என்ன அழகு தென்னையின்
நாட்டியம்.''
(சுபமங்களா, மார்ச் 1992)

மென்மையான அழகுணர்வு இழையோடும் நேரடி அனுபவத் தாக்கமே ஹைகூவின் தாரகம். —இன்னும் வரும்

## திருத்தம்

'தமிழ் கண்ட ஹைகூ' தொடர் முதல் அத்தியாயத்தில் கவிஞர் கழனியூரனின் இயற்பெயர் சாகுல்அமீது என்பது, எம்.எஸ். அப்துல் காதர் என்று அடைப்புக்குள் திருத்தப்பட வேண்டும். பெரியதொரு ஆய்வு முயற்சியில் இந்தப் பெயர்ப் பிசகு நிகழ்ந்ததற்கு வருந்துகிறேன்.

—நெல்லை சு. முத்து

படிப்பகம்

www.padippakam.com

## ஜீவராம் சுந்தர்

**1**

கலைக்காக எழுதுபவன் நீ.
பணத்திற்காக எழுதுபவன் அவன்.
புகழுக்காக எழுதுபவன் இவன்.
எதற்காகவும் இல்லாமல்
எழுதிவிட்டுப் போகிறேனே நான்?

**2**



எனக்குக் கிடைக்கும் நேரம் கொஞ்சம்.
அதிலுன் தழும்பேறிய கோரமான
முகத்தைக் காட்டாதே.
நான்
படிக்க வேண்டிய புத்தகங்கள்,
கிழிக்க வேண்டிய கவிதைள்
ஏராளமிருக்கின்றன.;
பிரபஞ்சத்சின் பேருண்மைகளை
யோசித்துக் கொண்டிருக்கையில்
உன்னுடைய விகாரமான
கற்பனைகளை நீட்டாதே.
போ. போய்விடு.
இல்லையா, இந்தா முகமூடி.
அணிந்துகொண்டு
ஓர் ஓரமாக உட்கார்.



**3**

அறிவுடையார் ஆவதறிவார்:
அறிந்தென்ன ஆகப்போகிறது?
பணம் சேர்; பணம் சேர்;
வீடு வாங்கலாம்:
வாங்கியென்ன ஆகப்போகிறது?
தத்துவம் படி; தத்துவம் படி:
மனசின் சூட்சுமம் புரியும்:
புரிந்தென்ன ஆகப்போகிறது?
மக்களை ஒன்று திரட்டு; ஒன்று திரட்டு;
புரட்சி செய்யலாம்:
செய்தென்ன ஆகப்போகிறது?
சரி சரி, இருந்து தொலை.
அது போதும்.



படிப்பகம்

www.padippakam.com

## விழைவு

அடடா . . .
தொலைபேசியினடியில்
விட்டு வந்தேன்
தொலை தூரம்
திருத்தம் செய்த என் கவிதைகளை.
கவி சம்மேளனத்தில்
கை கட்டி அமர்ந்தேன்;
செவிகளுக்கு மட்டுமே
வேலை.
இல்லத்துணைவி இல்லை:
இல்லம் பூட்டியிருக்க . . .
இந்த நெருக்கடி வேளையில்
இல்லம் செல்லத் தேவையின்றி,
என் கவிதை ஏந்தி தொலைபேசி
என்னை அழைக்காதா . . .?

தெலுங்கு: பெம்மராஜு கோபாலகிருஷ்ணா
தமிழில்: சாந்தா தத்

## மயான சினேகிதன்

என்னுள் வட்டமிடும்
பால்ய வயதுப் பறவை.

காது குத்தி
கடுக்கன் போட்ட நேரம்;
புத்தகத்திற்குப் பதிலாக
சோற்றுத் தட்டு சுமந்த பள்ளிக்கூடம்;
மாடு பூட்டி
வலம் வந்த காலம்;
ஏர் பூட்டி
வயலில் போட்ட கோலம்;
நினைவுக்கு வராத அன்றைய நிஜங்கள்.
ஆனால் . . .
ஏரிக்கரையோரம் நேசம் பேசிய
அவளின்
உறவுமுறை சினேகிதம்
என் பார்வைக்குக் கிட்டும் தூரத்தில் . . .
நான் இன்றோ, நாளையோ . . .
மயான சினேகிதன்.

புதுவை இளவேனில்

படிப்பகம்

www.padippakam.com

*தமிழில்:* **கே.ஜெகதீஷ்**

## இந்த நூற்றாண்டு

இருபதாம் நூற்றாண்டு
ஆத்திரத்தில் கடுமையாகி
நிற்கிறது.

அதன் கண்களில் நாம்
கேவலப் பிறவிகளாய்த்
தெரிகிறோம்.

இதற்கு முன்னர்
எந்தக் காலத்திலும்
எந்த யுகத்திலும்
மனிதர்கள்
இவ்வளவு ரத்தம்
சிந்தியதில்லை.

இவ்வளவு பொய்களும்
பேசியதில்லை.

இருபதாம் நூற்றாண்டு
தன் மக்களால்
பாராட்டப்படவும்
நியாயம் இருக்கிறது.

நமது நாட்களைப்போல்
கொடுமைகளை எதிர்த்து,
பொய்மைகளை எதிர்த்து,
மனிதர்கள்
இவ்வளவு உக்கிரமாக
என்றும்
போராடியதில்லை.

**-ரசூல் கம்ஸதோவ்**
*(ருஷ்யா)*

## சபதங்கள்

நேற்று
சபதங்களின் காரணமாக
மதுக்கோப்பையை
உடைத்தேன்.

இன்று மதுக்கோப்பையின்
காரணமாக
சபதங்களை உடைக்கிறேன்,

**-சல்மானி**
*(பாரசீகம்)*

## வேண்டாம்

என் தோழர்களே
நான் இறந்த பின் என்க்காக
சிலை வைக்காதீர்கள்.

தெய்வம் இல்லையென்று
கூறவந்த என்னை
தெய்வமாக்கி
இழிவுபடுத்தாதீர்கள்!
உங்கள் இன்ப மாளிகையை
என் இடிந்து சிதைந்த
கல்லறை மீது
எழுப்பாதீர்கள்.

**பாப்லோ நெருடா**

## ஒன்! டூ! த்ரீ!

ஒரு குழந்தை
கால் விரல்களாலும்
கை விரல்களாலும்
எண்ணத் துவங்குகிறது
பள்ளியில். 1...2...3...
பின்பு 20, 30, 40...
எண்ணற்றதை எண்ணி
அது வாழ்வைப் புரிந்து
வாழ ஆசைப்படுகிறது.

ஆனால் இன்று ஒரு
விஞ்ஞானி எண்ணுகிறான்:
Count Down
10- 9- 8- 7 என்று.
அணுகுண்டு பறக்கிறது.
அவ்வளவுதான்-
அத்தனையும் அழிகிறது!

அணுவால்--
எண்ணிக்கொண்டிருந்த
அந்தச் சின்னக்
குழந்தைக்கு
எண்ணுவதற்கு
விரல்கள் இல்லாமல்
போயின.

**பீட்டர் டெம்பெஸ்ட்**
*(ருஷ்யா)*

படிப்பகம்

www.padippakam.com

## முகங்கள்

பிரம்மனுக்கு நாலு முகம்;
முருகப் பெம்மானுக்கு ஆறுமுகம்;
இலங்கை கோனுக்கும் பத்துமுகம்தான்.
ஆனால் நம் அரசியல்வாதிக்கு . . . ?
சற்றுப் பொறுங்கள்—
கணிப்பொறி திணறுகிறது.

## ஹரே! கிருஷ்ணா

கண்ணன்தான் எங்கள்
அரசியல்வாதிகளின் குரு.
ஆனால் அவனால் தன் பவள வாயில்
அண்ட சராசரங்களைக்
காட்டத்தான் முடிந்தது.
இவர்கள் தம் வாயால்
அதன் அமைதியையே
ஏலம் போட முடிகிறது:
குருவை மிஞ்சிய சிஷ்யர்கள்.

எஸ். முருகேசன்

## வந்தே மாதரம் என்பார்கள்

ஏ, உடன்பிறப்புகளே!
இரத்தத்தின் இரத்தங்களே!
குல்லாய் போட்டவர்களே!
கொடி தூக்கியவர்களே!
உங்களால் காரில் செல்ல முடிகிறது.
உரிமை இருக்கிறது,
எப்படி வந்தது என்று கேட்க
எனக்கு உரிமை இருக்கிறது.
ஆனால் கேட்க விருப்பமில்லை;
எனக்கு அது தேவையுமில்லை.
அதற்காக—
தூசியை, புகையை, மழை நீரை, சேற்றை
என்மேல் வாரியிறைக்காமல் செல்லுங்கள்.
அப்படி இறைத்தால், அங்கே
வாஞ்சிநாதன்களும்
வ. உ. சி.க்களும் வருவார்கள்;
வந்தே மாதரம் என்பார்கள்.

குறிப்பன்

படிப்பகம்

www.padippakam.com

# ஒளிப் பறவை

**கேத்தீம்பட்டி செல்வா**

போர்க் காலங்களைப்போல் அல்லாமல்
எங்கள் ஊர் வானம்
நிர்மலமான நீலப் பூவாய் விரிகிறது.

உழவர்களுக்கு வருத்தமே என்றாலும்
குழந்தைகளின் முகத்தில்
ஓர் அறுவடை நாளின் சந்தோஷம்.

ஏராளமான இடையூறுகளுக்குப் பின்னும்
ஒளிப் பறவை கூடு தேடி அடையும்போது,
வழக்கமான அதன் சோக கீதம்
மக்களின் காதுமடல்களை வருடத்தவறுவதில்லை.
இருந்தும்- ஏக்கப் பெருமூச்சு மெலெழும்ப,
இருட்டின் மெல்லிய தாலாட்டில்
அது உறங்கிப்போகும்.





விழிகள் அச்சமயம் மூடி மறைத்தாலும்
இதயப் பைக்குள் கனவுகள்
உடன் வந்து குவியும்.
நம்பிக்கை கணக்காளனைப்போல்
ஒவ்வொன்றாகக் கூட்டிக் கழித்து
இருப்பு காட்டும்.
இலாபத்தை எதிர்பார்த்து ஒருக்காலும்
வாழ்க்கைப் புத்தகம் நிரம்பியதில்லை.

ஒன்றுமட்டும் திடமானது.
உறக்கம் கலைந்து ஒளிப்பறவை
மீண்டும் ஒருவேளை கூடு தேடி வரும்போதும்
காற்றின் மெல்லிய அசைவுகளில்
அதன் சோக கீதம்
வானப் பரப்பெங்கும் பரிசுத்தமாய்
ஒலித்துக்கொண்டிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

மா. ரா. ராமசாமி

# பாதையை மாற்றிய பாடல்

இலக்கியம் சமுதாய நிலையைப் பாதிக்கும், பாதிக்காது என்பதான விவாதம் தொடர்ந்து இருந்துகொண்டு உள்ளது. பாரதியின் கவிதைகள் தமிழ் மக்களை விடுதலைப் போராட்ட காலத்தில் பாதித்தன என்பதை நாம் அறிவோம். ஒரு சில கதைகள் தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் பாதித்ததாகப் பத்திரிகைகளில் கடிதங்கள் வெளி வருவதுண்டு.

அதே போல ஒரு கவிதை ஒரு தனி மனிதனின் வாழ்க்கையை வெகுவாகப் பாதித்தது. அவனது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்தது. அக்கவிதை அல்லது பாடல் திருவெம்பாவையில் உள்ள பத்தொன்பதாவது பாடல். அருட்செல்வர் மாணிக்கவாசகர் எழுதியது. பாதிக்கப்பட்ட மனிதன், வேறு யாருமில்லை: நாம் அனைவரும் அறிந்த காளமேகம்தான். கவிரத்தினம். ஆசுகவி காளமேகம். சிலேடைப் புலி காளமேகம்.

காளமேகத்தின் பூர்வாசிரமப் பெயர் வரதன். வைணவப் பிராமணர். இளம் வயதில் இவர் திருவரங்கம் கோயில் மடப்பள்ளியில் பரிசாரகராக இருந்தார். பரிசாரகர் என்றால் சமையல் செய்பவர், சமையல் செய்பவருக்கு உதவியாளர், சமைத்த பொருட்களை வினியோகிப்பவர் என்று பொருள்.

திருவரங்கம் என்கிற வைணவ க்ஷேத்திரத்துக்கு அருகில் இருப்பது திருவானைக்கா என்னும் சிவன் தலம். இந்த திருவானைக்காவிலுள்ள ஜம்புகேஸ்வரர் கோவிலில் சதிர் ஆடுவதற்கு என்று தேவதாசி குலத்தினர் சிலர் இருந்தனர். அக்குலத்தில் உதித்தவள் மோகனாங்கி.

மோகனாங்கியை திருவரங்கம் கோயில் பரிசாரகரான வரதன் தொடுப்பாக வைத்திருந்தான். இந்த விவரம் ஊர் அறிந்த சமாச்சாரம்.

ஜம்புகேஸ்வரர் ஆலயத்தில் ஒரு சமயம் சதிர்க் கச்சேரி நடைபெற்றது. திருவெம்பாவை பாடல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருத்தி அபிநயம் பிடித்து ஆடினாள். பத்தொன்பதாவது பாடலுக்கு ஆடியது மோகனாங்கி.

இந்த திருவெம்பாவை, திருப்பாவை ஆகிய இரு பாடல் தொகுப்புகளும் கோவில்களில் சதிராடும் கணிகையருக்காகவே பாடப்பட்டனவோ என்ற ஐயம் என்னுள் உண்டு. ஏனெனில் இந்த இரு தொகுப்புகளிலும் சிவப்பிரானை மணக்க விரும்புவதாகவோ, கண்ணனைக் கல்யாணம் செய்து கொள்ள ஆவல் கொண்டுள்ளதாகவோ சொல்லப்படவில்லை. குடும்பப் பெண்கள் சம்பந்தப்பட்ட ஆண் தெய்வமாக இருந்தாலும் திருமணம் செய்து கொள்ளத்தான் விருப்பப் பட்டிருக்கின்றனர். குளத்தில் நீராடச் செல்லும் அத்தனை பெண்களையும், அந்த

படிப்பகம்

www.padippakam.com

ஆண், தெய்வமாகத்தான் இருக்கட்டுமே, திருமணம் செய்வது என்பது சாத்தியமா? மேலும் அக்கன்னிப் பெண்களிடையே சச்சரவு எழுந்து, தன்னைத் தான் இறைவன் மணந்து கொள்ள முற்படுவான் என்ற குரல் உரத்து எழவும் வாய்ப்பு உளது. கோயில்களில் பணிபுரியும் கணிகைகளிடையே அத்தகைய சச்சரவு எழ வாய்ப்பு அறவே இல்லை.

நிற்க, திருவெம்பாவையில் பத்தொன்பதாவது பாடலுக்கு அபிநயம் பிடித்து, கோயில் பிரகாரத்தில் மோகனாங்கி பாடி ஆடுகிறாள். குழல், யாழ், மிருதங்கம், ஜால்ரா முதலான பக்க வாத்தியங்கள் மோகனாங்கியின் கால் சதங்கைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு அடக்கமாக முழங்குகின்றன.



அப் பத்தொன்பதாவது பாடலைப் பார்ப்போம்:

*உன்கையில் பிள்ளை*
*உனக்கே அடைக்கலம்என் (று)*
*அங்(கு)அப் பழஞ்சொல்*
*புதுக்கும்எம் அச்சத்தால்.*
*எங்கள் பெருமான்*
*உனக்கொன் றுரைப்போம்கேள்:*
*எம்கொங்கை நின்அன்பர்*
*அல்லார்தோள் சேரற்க;*
*எம்கை உனக்கல்லாது*
*எப்பணியும் செய்யற்க;*
*கங்குல்பகல் எம்கண்*
*மற்றொன்றும் காணற்க;*
*இங்கிப் பரிசே*
*எமக்குஎம்கோன்! நல்குதியேல்,*
*எங்குஎழில்என் ஞாயிறு*
*எமக்குஏலோர் எம்பாவாய்!*

பாடலின் பொருள்: எங்கள் பிரானான சிவபெருமானே மக்களிடையே 'உன் கையில் இப்பிள்ளையைக் கொடுத்து விட்டேன், இனி இவளைக் காப்பது உன் கடமை' என்பதான பழைய வாக்கு எங்களைப் பொருத்தவரை புதுப்பிக்கப்பட்டுவிடும் என்ற அச்சத்தால், உன்னிடம் கேட்டுக் கொள்கிறோம். எங்கள் முலைகள் உன் அடியார் தோளில் மட்டுமே இணைய வேண்டும். எங்கள் கைகள் உனக்கு அல்லாது வேறு எந்த ஒரு பணியும் செய்யாது காக்க வேண்டும். எங்களுடைய கண்கள் இரவும் பகலும் உன்னை அல்லாது வேறு எதையும் காணாது இருக்கட்டும். இந்த வாய்ப்புகள் எங்களுக்குக் கிட்டுமாகில் சூரியன் எந்தத் திசையில் எழுந்தால் எங்களுக்கு என்ன, கவலை இல்லை.

மிக அழகான பாடல் இது. திருப்பித் திருப்பிப் படித்து ஆனந்தம் அடையலாம்.

இப்பாடலுக்கு அபிநயம் பிடித்து. ஆடுகிறாள் மோகனாங்கி. '..... எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க......' என்ற பாடல் அடி வரும்போது கூடி இருந்த அவளுடைய தோழிகள் நகைக்கின்றனர். அவர்கள் நகைத்து, ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக் கொள்வதை மோகனாங்கி ஆடலூடே கவனிக்கிறாள் ஆடி முடித்த பின் தோழியர்களிடம் வருகிறாள்.

www.padippakam.com



''ஏன் நகைத்தீர்கள்?''

''நாங்கள் எங்கே நகைத்தோம்?''

''சொல்லுங்கடீ! நான் ஆடிய போது நகைத்தீர்கள். 'எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்று நான் பாடி ஆடிய போது, நீங்கள் ஒன்று சேர்ந்து நகைப்பதை நான் கண்டேன். அப்படி நகைக்க என்ன இருந்தது?''

தோழியர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர். விவரத்தை எப்படி எடுத்துச் சொல்வது என்பதாக ஒவ்வொருவருக்கும் தயக்கம். அவர்களில் ஒருத்தி துணிந்து முன் வருகிறாள்.

''நான் சொல்கிறேன், மோகனா! நீ பாடி ஆடிய பாடலுக்கும், உன் அன்றாட வாழ்க்கை முறைக்கும் உள்ள முரண்பாட்டைக் கண்டு சிரித்தோம்.''

''உம்......... முரண்பாடா? என்ன முரண்பாடு?'' மோகனாங்கி எண்ணிப் பார்க்கிறாள். புரியவில்லை.

''எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்ற பாடல் அடி, சிவனடியாருடன் தான் நீ சேர வேண்டும் என்பதைச் சொல்கிறது. ஆனால் நீ ஒரு வைணவரைத் தொடுப்பாக வைத்துக் கொண்டிருக்கிறாய். இது முரண் அல்லவா?''

இந்த உரையைக் கேட்ட மோகனாங்கி சற்று நேரம் ஸ்தம்பித்து நிற்கிறாள். உண்மை வெகுவாக அவளுடைய உள்ளத்தை நோகச் செய்கிறது. இது எப்படி இத்தனை காலம் தனக்குத் தோன்றாது போயிற்று என்பதாகச் சிந்தித்தாள். தன் மீதே கோபம் எழுகிறது. சதிராட்ட ஆடை அணிகளுடன் விருட்டென்று வீடு திரும்புகிறாள்.

அன்று இரவு கோயில் திருப்பணிகளை முடித்துக் கொண்டு வரதன் அன்றையக் கூலி, பிரசாதங்களுடன் மோகனாங்கி வீட்டை நோக்கி வருகிறான். வீட்டின் கதவு தாளிடப் பட்டிருக்கிறது. தட்டுகிறான். திறக்கப்படவில்லை.

''மோகனாங்கி!''

''மோகனாங்கி இங்கு இல்லை. நீங்கள் போகலாம்.''

''என்ன விளையாட்டு இது மோகனா! நான் வரதன் வந்திருக்கிறேன்.''

''தெரிகிறது. நீங்கள் போகலாம்.''

''ஏன், மோகனா? உனக்கு என்ன நேர்ந்தது? நான் என்ன தவறு செய்தேன்?''

''நீங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. நான் தான் தவறு செய்தவள்.''

''புரியும்படி சொல்லேன், மோகனா!''

''நீங்கள் வைணவர். நான் சிவன் கோவிலில் சதிராடும் தாசி. உங்களுக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது.''

''என்ன சொல்கிறாய், மோகனா? நம் இருவர் இடையே சாதியும், பிரிவும் எதற்காக வருகிறது? நான் ஆண், நீ பெண். உன் பால் நான் அன்பு செலுத்துகிறேன். என்னிடம் நீ பிரியமாக இருக்கிறாய். இந்த அன்பு, பிரியத்துக்கு இடையே சாதிப் பிரிவினை எப்படி நுழையமுடியும்?''

''நுழைகிறது.'' கதவைத்

படிப்பகம்

www.padippakam.com



திறந்தாள் மோகனாங்கி வரதனை உள்ளே அழைத்துச் சென்று, ஜம்புகேஸ்வரர் ஆலயத்தில் தான் பாடி ஆடியதையும், அப்போது தோழியர் சிரித்ததையும், சிரித்ததின் காரணத்தையும் தெளிவாகத் தெரிவிக்கிறாள். அவன் கட்டிலில் அமர்ந்து காது கொடுக்கிறான்.

திகைக்கிறான். இப்படியும் தன் அன்றாட அமைதியான வாழ்க்கைக்கு ஓர் இடையூறு நேருமோ என்று இருக்கிறது அவனுக்கு. என்ன செய்வது, ஏது செய்வது என்பது புரியவில்லை. மோகனாங்கியை விட்டு விலக அவனால் இயலாது. எதிர்காலம் இருளடைகிறது. ஏதும் தோன்றாமல் அவன் தன் இனியவளின் முகத்தை நோக்குகிறான்

''ஒரு காரியம் செய்தீர்களானால் நம் உறவு நீடித்து இருக்கும்.''

'சொல்' என்பதாக அவன் முகம் கேட்கிறது.

''வைணவ சமயத்தை விட்டு, நீங்கள் ஸ்மார்த்தர் ஆகிவிட வேண்டும்.'' ஸ்மார்த்தர் என்பது சிவனை வழிபடும் பிராமண சமூகத்தினர்.

''அது எப்படி முடியும், மோகனா?''

''ஏன்?''

''ஸ்ரீரங்கம் கோயில் மடப்பள்ளியில் பணி புரியும் பரிசாரகன் நான். நான் ஸ்மார்த்தனாக இருந்து, வைணவக் கோயிலில் பணிபுரிய முடியாது. வேலை போய்விடும். வேலை போய் விட்டால், நான் எப்படி வாழ்க்கை நடத்துவது? உனக்கு அன்றாடம் தர வேண்டிய பணத்தை எங்கிருந்து கொண்டு வந்து தருவேன்?''

''வேண்டாம். எனக்குப் பணம் ஏதும் நீங்கள் தர வேண்டாம். கோவில் மானியம் வருகிறது. அதைக் கொண்டு நான் வாழ்வேன்.''

''நான் எப்படி வாழ்வது? என் இருவேளை உணவுக்கு என்ன செய்வேன்?''

மோகனாங்கி யோசிக்கிறாள். திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் ஆலயத்தில் மடப்பள்ளி கிடையாது. சிவன் கோவிலில் பிரசாதம் இல்லை. 'சிவன் சொத்து குல நாசம்' என்பது ஐதிகம். திருவரங்கம் கோயிலில் வேலை பறி போனால் இவர் என்னதான் செய்வார்?

சட்டென்று ஒரு யோசனை அவளுடைய அறிவில் பளீரிடுகிறது. வரதன் கெட்டிக்காரன். வாசாலகன். சிரிக்கச் சிரிக்கப் பேசுபவன். ஆனால் அதிகப் படிப்பு இல்லாதவன்.

திருவானைக்கா ஆலயத்தைச் சார்ந்து பாடசாலை ஒன்று உள்ளது. வேத பாடசாலை. அதில் வேதங்கள் மட்டுமல்லாது, இதிகாசம், புராணம், தமிழ் இலக்கியம், இலக்கணம் ஆகியவை கற்றுத்தருகிறார்கள். அப்பாடசாலையில் சேர்ந்து வரதன் படித்தானானால், வேளா வேளைக்கு உணவு கிடைப்பது மட்டுமல்லாது, அவன் தன் அறிவையும் வளர்த்துக் கொள்ளலாம்.

மோகனாங்கி தன் யோசனையை வரதனிடம் தெரிவிக்கிறாள்.

வரதன் கேட்டுக் கொள்கிறான். அவனுக்கு அறிவு தாகம் உண்டு. ''மெய்யாகவே என்னால் திருவானைக்கா பாடசாலையில் சேர்ந்து கல்வி பெற இயலுமா, மோகனா?''

''முடியும். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். பாடசாலைக்குப் போதுமான பின்

படிப்பகம்

www.padippakam.com



ளைகள் கிடைப்பதில்லை என்ற பரிதவிப்பு அங்கு இருக்கிறது.''

''அப்படியானால் சரி, மோகனா! எப்போது நான் ஸ்மார்த்தனாக மாறலாம்? நாள், நட்சத்திரம். ராகு காலம் பார்க்க வேண்டுமா?''

''வேண்டாம். இப்போதே நீங்கள் வைணவ சமயத்தை விட்டு ஸ்மார்த்தராகிவிடலாம். நீங்கள் ஸ்மார்த்தரானால்தான் நான் உங்களுடன் உறவு வைத்துக் கொள்வேன்.''

''சரி.'' வரதன் எழுந்து நின்றான்.

மோகனாங்கி அவனைக் குளியல் அறைக்கு அழைத்துச் செல்கிறாள். காவிரி ஆற்றில் தான் அக்காலத்தில் மக்கள் குளிப்பதாக இருந்தாலும், நம் வசதிக்காக மோகனாங்கியின் வீட்டில் ஒரு குளியலறையை நிர்மாணிக்கிறோம்.

நெற்றி நாம அடையாளம் போக வரதன் அந்த இரவில் குளிக்கிறான். நீர் போக துண்டால் துடைத்துக் கொண்டு வந்த வரதனிடம் மோகனாங்கி வேற்றாடை தருகிறாள். அணிகிறான். திருநீறு தருகிறாள். நீரில் குழைத்து நெற்றியிலும் மார்பிலும், கைகளிலும் பூசிக் கொள்கிறான்.

''சொல்லுங்கள்.''

''என்ன?''

''தென்னாடு உடைய சிவனே போற்றி!''

''தென்னாடு உடைய சிவனே போற்றி!''

தீட்சை முடிவு பெற்றது.

தாசியாகிய அவளே குரு.

பாடசாலையில் சேர்ந்து படிக்கிறான். அவனுடைய அறிவு அற்புதமாக வளர்ச்சி பெறுகிறது. ஒப்பற்ற கவிஞன் ஆகிறான். காளமேகம் என்பதாகப் பெயர் சூட்டிக் கொள்கிறான்.

*நாரா யணனை நராயணன்*
*என்றே கம்பன்*
*ஓராமற் சொன்ன உறுதியால்*

எல்பதாக சப்பலைப்பே கிண்டல் செய்யும் அளவுக்கு உயர்வு பெறுகிறான்.

*சீரங்கத் தாரும்*
*திருவானைக் காவாரும்*
*போரங்க மாகப்*
*பொருதுவதேன்— ஓரங்கள்*
*வேண்டாம் இதென்ன*
*விபரம் தெரியாதோ*
*ஆண்டானும் தாதனும்*
*ஆனால்.*

என்று வைணவ, சைவ சமயத்தார் இடையே எழுந்த பூசலைச் சாடுகிறான்.

தமிழ் மொழி இவனிடம் விளையாடுகிறது; தொண்டு செய்கிறது; சொன்னபடி வளைந்து கொடுக்கிறது.

பெரும் புலவன் என்ற அளவுக்கு வரதன் என்னும் கோயில் பரிசாரகனை மாற்றியது ஒரு கோயில் தாசி ஆயினும் அவளுக்குத் தூண்டுதலாக திருவெம்பாவையின் பத்தொன்பதாவது பாடல் அமைந்தது என்பதுதான் உணரப்பட வேண்டிய விவரம்.

காளமேகம் இறந்த போது இரட்டைப் புலவர்கள் பாடிய பாடல் இது.

*ஆசு கவியால்*
*அகில உலகமெங்கும்*
*வீசு புகழ்காள மேகமே பூசுரா*
*விண்கொண்ட செந்தழலால்*
*வேகுதே ஐயையோ*
*மண்தின்ற பாணமென்ற வாய்.*

மரணச் செய்தி கேட்டு, ஓடோடி வந்தாள் மோகனாங்கி என்று வரலாறு கூறுகிறது. ★

படிப்பகம்

www.padippakam.com

# தலைவரே!

ஜீவன்

(ஒளி பரவும்போது, கட்டம் போட்ட லுங்கியும் ஒரு சினிமா நடிகரின் படம் போட்ட பனியனும் அணிந்த ஒரு மனிதன் மேடையின் மையப் பகுதியில் இரண்டு சோடா பாட்டில்களை கையில் வைத்து சுழற்றிக் கொண்டிருக்க, சிறிது தூரத்தில் நான்கு பேர் பயத்துடன் நின்று கொண்டிருக்கின்றனர்.)

குரல்-1:— ...டேய்...எவன்டா அவன், போலீசுக்கு மொட்டை போட்டவன்? எந்த போலீஸ் என்னை என்னடா செய்யும்? பொட்டைப் பசங்களா...த்தூ... உங்களுக் கெதுக்குடா மொகத் திலே மீசை.

டேய்...நீங்க ஏன்டா பயந்து போயி நிக்கிறீங்க? வந்து தொழிலை கவனிங்கடா... டே, மேஜையைப் போடுறா. எந்தக் கொம்பன் வர்றான்னு நான் பார்க்கிறேன்.

குரல்-2:— அதில்லைண்ணே

குரல்-1:— எதில்லைடா...சீ வந்து உட்காருவியா...

(நால்வரும் மேடையின் ஒரு ஓரமமர்ந்து சீட்டாடுவது போல பாவனை செய்கின்றர். அப்போது விசில் சத்தம் கேட்கிறது.)

டேய்... எவன்டா அவன்? மரியாதையா அங்கேயே நில்லு. மீறி வந்தே, சீவிடுவேன்.

(குரல்6 மேடைக்குள் வருகிறான்.)

ஓ நாயுடுவா! டே நீங்க பயப்படாம ஆடுங்கடா. ஏய்யா நாயுடு, இப்பிடியா உசிரு போற மாதிரி பிகில் ஊதறது. நம்ம பசங்க ரொம்ப பயந்து போயிட்டாங்க.

டேய் .. இப்ப வந்து பாருங்கடா யாரு வந்திருக்கிறதுன்னு? போலீசே என் போலீசுடா...போட்டானுங்களாம் மொட்டைக் கடுதாசி. போக்கத்த பசங்க. என்ன நாயுடு ஏதாச்சும் விஷேசம் உண்டா?

குரல்-6:— நாளைக்கு கலால் பார்ட்டி நம்ம ஏரியாவுக்கு வந் தாலும் வரலாமாம்... அதனாலே ஒரு ரெண்டு மூணு நாள் எல் லாத்தையும் தள்ளி வெச்சிடச் சொல்லி ஐயா சொன்னாரு.

குரல்-1:— கவலையைவிடு நாயுடு... நான் பார்த்துக்கிறேன். ஐயாவை வீட்ல வந்து பார்க்கிறேன். உன்னையுந்தான்...

(குரல்-6 போகிறான்.)

டேய் மொத்த சரக்கையும் காலி பண்ணிடு.

குரல்-3:— அப்படின்னா மூணு நாள் பட்டினியா!

குரல்-4:— மொத்தமா இன்னிக்கே ஊத்திக்கிட்டாப் போச்சு.

குரல்-5:— அண்ணே! அப்ப தண்ணிய கொஞ்சமா கலக்கச் சொல்லு.

படிப்பகம்

www.padippakam.com


குரல்-1:— கழுதை... இது என்ன கவர்மெண்ட் சரக்கா நீத்துப் போக? 'கன்ட்ரி'டா. சுத்தமான சுதேசி சரக்கு...
(சீட்டாடுவதை நிறுத்திவிட்டு அனைவரும், குரல்-1 உம் சென்று சாராயம் வாங்குகின்றனர்.)

குரல்-1:— நாளை முதல் குடிக்கமாட்டேன்
சத்தியமடி தங்கம்
ராத்திரிக்கு தூங்கவேணும்
ஊத்திக்கிறேன் கொஞ்சம.

குரல்-3:— குடிப்பதற்கு மனமிருந்தால்—அவளை
மறந்து விடலாம்—அவளை
மறப்பதற்கு மனமிருந்தால்
குடித்துவிடலாம்

குரல்-4:— ஊத்திக் கொடுத்தாண்டி
ஒரு ரவுண்டு— இப்ப
உலகமே சுத்துதடி
பல ரவுண்டு-

(ஒவ்வொருவரும் இஷ்டம் போல பாடிக்கொண்டு ஆளுக்கொரு பக்கமாக நால்வரும் மேடையைவிட்டு வெளியேற, ஒரு மங்கலான குழல் விளக்கின் ஒளியில் குரல்-1 பணம் எண்ணுவது போல பாவனை செய்கிறான். விளக்கு பலமுறை அணைந்து அணைந்து எரிந்த பின்பு மேடை இருள்கிறது. மேடையில் மீண்டும் ஒளி வரும்போது குரல்கள் 2, 3, 4, 7, மேடையின் ஓரத்தில் நிற்க, குரல்-4 பேப்பர் படிக்கிறார்.)

குரல்-7:— என்ன தேர்தல் வந்து என்ன ஆகப்போகுது? ஊருக்குள்ள ஒரு ரோடு கூட ஒழுங்கா இல்லை. எங்க பார்த்தாலும் மேடும் பள்ளமும் குண்டுங் குழியுமா இருக்கு.

குரல்-3:— இதையே சமப்படுத்த முடியலே. இந்த லட்சணத்திலே சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்கப் போறாங்களாம். எதுக்கு பேப்பரை பொறட்டிப் பொறட்டி பார்க்கற!

குரல்-4:— இல்லை...நகரசபைத் தேர்தல்லே, நம்ம வார்டுலே ஆளுங்கட்சி வேட்பாளர் யாருன்னு எங்காச்சும் செய்தி இருக்கான்னு தேடுறேன்.

குரல்-2:— அதையேங்க தேடனும். அதான் தெரிஞ்ச விஷயமாச்சே.

குரல்-3ம்4ம்:— யாரு..?

குரல்-2:— அதான் பெட்ரோல் பங்க் வைச்சிருக்கே. அந்த தம்பிதான்.

குரல்-3.— யாரு? சாராயம் வித்தானே, அவனா!

குரல்-2:— யோவ், யாரை நீ அவன் இவன்னு மரியாதை இல்லாமப் பேசுற?

(குரல்-3இன் சட்டையை பிடிக்கிறான்.)

படிப்பகம்

www.padippakam.com



குரல்-4:— சட்டையை விடுங்க... சரி விடுங்க...இதுக்குப் போயி. கோவிச்சுக்கிட்டு.

குரல்-2:— அப்புறம் என்னய்யா? அந்தத் தம்பி நம்ம ஊருக்கு எவ்வளவு நல்லது. செய்யுது அதைப் போயி அவன் இவன்னா... அது சரி சாராயத்தை நம்ம பகுதியிலா விக்கிது. தம்பி இங்கல் லாம் விற்க வேண்டாம்னு ஒரு வார்த்தைதான் சொன்னேன்.

சரிண்ணே அப்படீன்னு எவ்வளவு மரியாதையா அந்தத் தம்பி இடத்தை மாத்துச்சு தெரியுமா?

(இப்பொழுது குரல்1, குரல்கள் 5 ,6, மேடையின் வலப்புற மிருந்து வருகிறார்கள். குரல் 1க்குரியவன் இப்போது வெள்ளை வேட்டியும்,வெள்ள முழுக்கை சட்டையும் அணிந்திருக்கிறான்.)

குரல்-1:— வணக்கண்ணே...!

குரல்-2:— வாங்க தம்பீ ...கேள்விப்பட்டேன். அதைப்பத்தித்தான் பேசிட்டிருந்தோம். நம்ம ஓட்டெல்லாம் உங்களுக்குத்தான். கேட்கவே வேண்டாம்.

குரல்-1:— அதுமட்டும் போதாதுண்ணே!

குரல்-2:— வீடு விடாப் போக நானும் வர்றேன்.

ரல்-1:— எல்லாருக்கும் வணக்கம்... மறந்திடாதீங்க...

(நால்வரும் வெளியேறுகின்றனர்)

குரல்-3:— அண்ணே! அவன் கள்ளச் சாராயம் விக்கிறான்னு மொட்டை எழுதினதே இந்த ஆளுதான்.

(மேடை இருளாகிறது. மீண்டும் ஒளி பரவும் போது குரல்கள் 1, 6, தவிர அனைவரும் தொலைக்காட்சி பெட்டிக்கு முன் அமர்ந்திருக்கின்றனர்.)

குரல்-2:— அட என்ன எளவுடா இது? இந்த விளம்பரங்கள் தான் நாட்டுக்கு சோறு போடப்போகுதோ. செய்திகள்னு போட்டிட்டு அப்புறம் எதுக்கு இத்தனை கண்றாவி.

குரல்-5:— நம்ம அண்ணன் நல்ல மெஜாரிட்டியிலே ஜெயிப் பாரு. இத செய்தியில கேட்டுத்தான் தெரியணுமா?

குரல்-2:— தெரியும். இருந்தாலும் அண்ணன் போட்டோவை டி. வியில பார்த்தா நமக்கெல்லாம் பெருமைதானே...நாமமட் டுமா பார்க்கிறோம், இந்த நாடேயில்ல பாக்கும்.

குரல்-5:— ஏம்ப்பா...கொஞ்சம் சும்மாயிருங்க. செய்திகள் வரப் போகுது.

(குரல்-7 டி. வியில் செய்தி வாசிப்பவர் போல அமர்ந்திருக்கி றார்.)

குரல்-7:— வணக்கம். தேர்தல் செய்திகள்.

இதுவரை நடந்து முடிந்த 230 சட்டசபைத் தொகுதிகளின் முடிவுகளில் ஆளும் கட்சிக்கு இதுவரை 130 இடங்கள் கிடைத் துள்ளன. தனது கட்சிக்கு கிடைத்துள்ள. இந்த வெற்றி மது விலக்குக் கொள்கைக்கு கிடைத்த மாகத்மவின் மன்னிக்கவும

படிப்பகம்

www.padippakam.com



மகத்தான வெற்றி என்று கருத்துத் தெரிவித்தார். கட்சி நிலவரம்.

| | |
|---|---|
| இதுவரை முடிவு தெரிந்த இடங்கள் | = 150 |
| ஆளும் க.சா. கட்சிக்கு | = 130 |
| ந. சா. கட்சிக்கு | = 10 |
| பூனைக் கட்சிக்கு | = 5 |
| சுயேட்சைகள் | = 5 |

இப்போது கிடைத்த செய்தி. கிருஷ்ணாபுரம் சட்ட மன்ற தொகுதியில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ந. சா. கட்சி வேட்பாளரை, ஆளும் க. சா கட்சி வேட்பாளர் 1,50,511 ஓட்டுகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். ஆளும் கட்சியின் பலம் இத்துடன் 131 ஆக உயர்ந்துள்ளது. மேற்கு வங்கத்தில்......

குரல்-2:— க. சா. கட்சிக்கு.

அனைவரும்:— ஜே!

குரல்-2:— பாசமிகு அண்ணன்

அனைவரும்;—வாழ்க!

(குரல்1ம் 6ம் அரங்கினுள் நுழைகின்றனர். இப்போது குரல்1க்குரியவர் தோளில் துண்டு ஒன்றும் நீளமாக அணிந்துள்ளார்.)

குரல்-2:— அதோ அண்ணன் வந்திட்டாரு...அண்ணன் வந்திட்டாரு. மாலையை எடுறா...பாசமிகு அண்ணன்.

அனைவரும்:— வாழ்க.

(அனைவரும் குரல்1ன் பின்னால் கோஷம் போட்டுக் கொண்டு போக, குரல் 3க்குரியவன் மட்டும் தலையில் கை வைத்தவாறு தரையில் அமர, மேடை இருளாகிறது. மீண்டும் மேடையில் ஒளி பரவும் போது குரல்-1 கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நிம்மதியின்றி நடக்கிறார். மற்றவர்கள் அவரைச் சுற்றி அமர்ந்து அவர் முகத்தையே நோக்குகின்றனர். இப்போது தங்க பிரேமுடன் கூடிய மூக்குக் கண்ணாடியும் அணிந்திருக்கிறார்.)

குரல்-4:— முதல்வர் உள்ள போயி மூணு மணி நேரமாச்சு. எப்படியும் நம்ம மாவட்டத்துக்கு இந்த முறை ஒரு அமைச்சர் பதவி தர்றதுன்னு ஏற்கனவே முடிவு பண்ணிட்டாங்களாம். அதுவும் ரொம்ப முக்கியமான இலாகா.

குரல்-5:— கள்ளுப்பட்டி தொகுதி எம். எல். ஏ. வுக்கு ஸ்பிரிட் பேக்டரிகாரரு சிபாரிசுன்னு கேள்வி. ஏன்னா, தொழில்லே இவரு போட்டி பாருங்க....

(குரல்-6 மூச்சு வாங்க ஓடி வருகிறான்)

குரல்.6:— அண்ணே! அண்ணே! நீங்க...

குரல்-1:— சொல்லித் தொலைடா

குரல்:6:— நீங்கதான் மதுவிலக்கு கொள்கை பிரச்சார மந்திரி.

(மேடையில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். குரல்2 ஓடிவந்து மாலையணிவிக்கிறார்.)

குரல்:2:— தலைவரே!

(குரல் 2 இரு கைகளையும் நீட்ட, குரல் 1 இரு கரம் குவிக்க, அனைவரும் உறை நிலையில் திரை மூடுகிறது.) ★

படிப்பகம்

www.padippakam.com

# ஆத்மார்த்தமாக...

வா. மு. கோமு

என் உடன்பிறவா, முகமறியா தோழிகளே!
நாம் கால வெள்ளத்தில்,
கற்பனை உலகத்தில் நாட்களை நகர்த்தி வருகிறோம்.
நான் பூப்படைந்து- வருடங்கள் நினைவிலிருந்தே
மறைந்த பின்னும்,
என் ஏக்க வெளிப்பாடுகளை
எந்த ஆண்மகனும் ஏற்க மறுப்பதேன்?
எனக்காக ஏற்படுத்திக்கொண்ட
தேடல் வலையில் ஒரு ஆண்மக மீன்
எப்போது விழுவான்?
அப்பாவின் தலையில் பணம் என்ற கதாயுதம் தாக்குகிறது.
அம்மாவுக்கு அழத் தவிர வேறென்ன தெரியும்?
எனக்கென்னவோ சர்ப்பமாய்ச் சீறத் தெரிவதில்லை.
நான் அம்மாவால் அடக்கி வாசிக்கப்பட்டவள்.
ஒவ்வொரு இரவும் என் கனவுகளும், ஆசைகளும்
விடியும் வரை புலம்பும் கதை தெரியுமா மானிடரே!
என்னை எப்போதாவது மணக்க வரும் மணாளனே!
எனக்காக எங்கேயோ வளர்ந்து
அவதரித்த ஆசை நாயகனே! கேள்:
உனக்காக என் உயிரைத் தருகிறேன்;
உடலைத் தருகிறேன்.— ஏனென்றால்,
கொடுப்பதற்கு இங்கு வேறெதுவும் இல்லாததால்,
தூணிலும் துரும்பிலும் இருப்பவனே!
என் கழுத்துக்கு மாலை எப்போது?
என் தோட்டத்தில் எப்போது மழை?

ஸில்வியா கவிதையை வாசித்து முடித்த போது மாணவர்களும் மாணவிகளும் கல்லூரி வளாகமே அதிரும்படி கை தட்டினார்கள்! நான் ஏதோ மனபாரத்துடன் இருந்தாலும் கவிதைக்காக கை தட்டினேன். நடுவர் குழுவில் இருந்த நான் எப்படி இந்த மூன்று வருடங்களாக இப்படி ஒரு பெண் இந்த கல்லூரியில் இருக்கிறாள் என்பதை கண்டறியாமல் போனேன்? கேள்வி கேட்டபடி இருந்தேன் என்னையே! அந்த வருட முதல் பரிசை அந்தக் கவிதை பெற்றதில் ஆச்சரியம்ஒன்றும் இல்லை. அடுத்த நாள் மாலையில் கல்லூரியில் இருக்கும் பெரிய ஆலமர நிழலில் தனியாய் அமர்ந்திருந்த ஸில்வியாலை நோக்கி நகர்ந்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



குனிந்தபடி எதையோ எழுதிக் கொண்டிருந்தவளிடம் "எக்ஸ்யூஸ் மீ ஸில்வியா" என்றேன். சட்டென விழிகளை உயர்த்தியவள் கொஞ்சம் ஆச்சரியமாய்ப் பார்த்து, "ப்ளீஸ் ஸிட்டவுன்" என்றாள். 'நான்,, என ஆரம்பித்ததுமே... "ரகுவரன். சுருக்கமாய் ரகு என்ற பெயரில் கையெழுத்துப் பிரதி நடத்துகிறீர்கள். தேர்டு பி. எஸ்ஸி. வீட்டில் அப்பா, அம்மா, தங்கை... கதைச் சுருக்கம். சரிங்களா ரகு?"

"சரி...நிரம்ப சரி . ஆமா?"

"இவைகள் எப்படித் தெரியும்? இதானே உங்க கேள்வி? ப்ளீஸ் வேண்டாமே!"

"நீங்க அந்தக் கையெழுத்துப் பிரதிக்கு...செய்யலாமே!"

"சாரி, எனக்குப் பிடிக்கல. நான் அரங்கத்துல வாசிக்கவே பயப்பட்டேன். பிரண்ட்ஸ் எல்லோருமே கம்பெல் பண்ணதால வந்தேன்."

"உங்களுக்கு கவிதை பிடிக்குமா?"

"பிடிக்கும்னு உங்களைத் தவிர யார் கேட்டிருந்தாலும் ஒரே வார்த்தைல முடிச்சிருப்பேன். நீங்க கேட்டதால ஏன் பிடிக்குதுன்னு சொல்லணும். கவிதை ஒரு சுக அனுபவமா... இருக்கு மனசுல. எனக்கு என் வீட்டு நிலை, இந்த படிப்பு.. இவை எல்லாமே கவிதைகள். என் கவிதைகள்ள அர்த்தங்களைத் தேட வேண்டியதே இல்லை. நேராவே இருக்கும். கவிதைகள் சோகம் காட்டினால்தான் பிடிக்கிறது."

"உங்களைப் பற்றி இவ்ளோ சொன்னீங்க... நான் இன்னும் என்னைப் பற்றி..."

"நானே சொல்றேனே! உங்க கவிதைகள் சமுதாயத்தை சாடும். அழிவுகளைக் கிண்டல் தொனியில படம் பிடிக்கும். எக்ஸாம்பிளா நீங்க கடைசியா லைப்ரேரில போட்டிருந்த புக்ல "பசி மயக்கம்"ங்கிற ஹெட் லைன்ல சொன்ன கவிதை இன்னும் மனசுல இருக்கு!

"எங்கிருந்து வருகிறது?
இந்த உறுமல் ஒலி?
எங்கிருந்து? எங்கிருந்து?
ஐயோ!
என் வயிற்றுக்குள்ளிருந்து."

இதை நான் அனுபவிச்சிருக்கேங்க ரகு! அது பசியோட கொடூரம்..." என்ற ஸில்வியாவின் கண்கள் ஈரமாய் இருந்ததைக் கவனித்தேன்.

★

"ரகு! சாரி ரகு... கொஞ்சம் லேட்டாயிடிச்சு..." என்ற வண்ணம் ஸில்வியா என் அருகில் வந்து அமர்ந்ததும் என் முகத்தைப் பார்த்தாள். பின் சிறிது நேரம் எதுவுமே பேசாமல் இருந்துவிட்டு, "சிரமமா இருந்திச்சா?" என்றாள்.

"என்ன செய்ய... மனுசன் காலைல இருந்து தடதடன்னு மிஷின் ஓட்டி, ஏதோ ஈவ்னிங் பத்து நிமிஷம் உன்கிட்ட இருக்கிறதுக்காக தவிச்சோடி வர்றேன். காணோம் காணோமின்னிட்டு நாம முதமுதலா காலேஜ்ல பேசிட்டதை அசைபோட்டுட்டிருந்தேன்."

"மலரும் நினைவுகளா?"

"ம்... ஆமா. எங்க உன் ஹேண்ட் பேக் காணோம்?"

"ஆபீஸ் போகலை"

"வொய்?"

"அப்பாவுக்கு மறுபடி உடம்பு சரியில்லை ரகு. இங்கதான் G.H.ல அட்மிட் பண்ணியிருக்கேன்," என்ற போது அவள் குரல் நெகிழ்ந்தது.

"முதல்ல கிளம்பு. அங்க அவரை அப்படி விட்டுட்டு இங்கே எப்படி வந்தே?"

படிப்பகம்

www.padippakam.com

''என்ன பண்றது நான்? அவரும் வேணும். நீங்களும் வேணும்,'' என அணை உடைந்தாற்போல் அழ ஆரம்பித்தாள்.

''ஸில்வி.. ஹேய். ஏன் இப்படி அழுதிட்டு? நான் எங்க போயிடுவேன்? இந்த மூஞ்சிய உன்னை விட்டா யார் விரும்புவாங்களாம்? அப்பா முக்கியம்டா. அவரை விட்டுட்டு வந்தது தப்பு.''

''ரிலேஷன்ல எல்லோரும் இருக்காங்க. இந்த முறை எனக்கு ரொம்ப பயமாயிருக்கு ரகு,'' என்றவள் இன்னும் அழுகையை நிறுத்தாமலிருக்கவே, குனிந்திருந்த அவள் முகத்தை கைகளால் நிமிர்த்தினேன்.

இம்முறை சப்தமாகவே அழ ஆரம்பித்தாள். என்னால் இப்போதைக்கு எதைச் செய்வது எனப்புரியாமல் போகவே, இறுக்கி என் நெஞ்சில் கட்டிக் கொண்டேன்.

''ஏதாவது சாப்பிட்டாயா?''

''ஊஹூம்... அப்பா அப்படி இருக்கப்ப, எப்படி...?''

''முதல்ல வா,'' என கிளம்பினேன். என்றுமில்லாமல் என் தோளோடு சாய்ந்தபடி வந்தாள். பூங்காவின் முன்புறமிருக்கும் சபையருக்குள் கூட்டிப் போனேன்.

''என்ன சாப்பிடறே?''

''எதுவும் வேண்டாம்.''

''ப்ளீஸ்'' என்றதும் ''காபி போதும்'' என்றாள். இருவரும் காபி சாப்பிட்டுவிட்டு ஹாஸ்பிடல் சென்றபோது அவளது உறவுக்காரர்கள் எங்களை எந்த விதத்திலும் ஆச்சரியப்பட்டுப் பார்க்கவில்லை. ஒருவேளை ஸில்வியாவே முன்பே கூறியிருந்திருப்பாளோ என்னவோ!

முன்பு இரண்டு முறை ஸில்வியாவின் அப்பா டேவிட்டோடு பேசி இருக்கிறேன். பழகுவதற்கு இனிமையானவர் முன்பொருமுறை இப்படி அட்டாக் ஆகியிருந்த போது ''இறப்பு நிரந்தரமானது ரகுவரன். அது ஒரு அமைதிப்படுத்தும் ஆசனம,'' என்றார். இப்போது அவரைப் பார்க்கையில் சென்றமுறை பார்த்ததை விட ஏராளம் மெலிந்திருந்தார்.

''ஒரு மணிக்கு ஒரு முறை இன்ஜெக்ஷன் கொடுத்திட்டிருங்காங்க,'' என்றாள்.

''இப்படி இருந்திருக்குன்னு ஏன் தகவல் சொல்லலை?''

''சாரி பயத்துல,'' என்றாள். எங்கே மறுபடியும் அழத் துவங்கி விடுவாளோ என நினைத்து, அகன்று வெளியில் வந்து நின்றுகொண்டேன்.

''நீங்க கிளம்பறதானா கிளம்புங்க, ரகு.''

''நான் போகலை.''

''உங்க வீட்ல சொல்லிட்டு...''

''நான் போகலை,'' என மறுபடியும் அழுத்தமாய் சொன்னதும் விட்டுவிட்டாள்.

''ஏதாவது பேசினாரா?''

''எதுவும் பேசலை. நீங்க சாப்பிட்டாவது வாங்க ரகு.''

''என்னைப் பார். இப்படி பிரிச்சு பிரிச்சு பேசிட்டே இருந்தே.. ஒரேயடியா...'' தொடர்ந்து பேச முற்பட்ட என்னைத் தடுத்துவிட்டாள்.

அன்றிரவு ஒன்பது மணியளவில் டேவிட் செத்துப் போனார். யார் யாரோ என்ன என்னவோ சொல்லியும் தேற்ற முடியாமல் தவித்தனர் ஸில்வியாவை. கடைசியில் என் மார்பில் புதைந்து அழுதாள்:

''நாமும் இதே மாதிரிதான் நிறையப் பேரை தவிக்க வச்சுட்டு சாவமா, ரகு?.. பேசுங்க ரகு. சாவு எதுக்கு ரகு?''

பல வருடங்களுக்குப் பிறகு அன்று நான் அழுதேன். ●

படிப்பகம்

www.padippakam.com

# என் மதம் - ஒரு மறு பரிசீலனை பற்றியவை

● "என் மதம்— ஒரு மறு பரிசீலனை" என்ற 'மதம் பற்றிய நீண்ட கட்டுரைத் தொடர்' இதழைச் சிறப்பாக அலங்கரித்தது. "இந்திய நாட்டில் இன ஆதிக்கமும், மொழி ஆதிக்கமும் இல்லாத, கௌரவமான அதிகாரப் பரவலோடு கூடிய, அசலான மதச்சார்பின்மையின் அமலாக்கம்தான் நாட்டை ஒன்றாய் இணைத்திருக்கும்" என்ற வரிகள் எத்தனை உண்மை!

சேலம்-1 ஆர். செந்தாமரை

## நேசம் பாசம் வாசகர்கள்



● "என் மதம்- ஒரு மறு பரிசீலனை," படித்து முடித்தேன். சிந்தனையைத் தூண்டும் ஆழமான ஆராய்ச்சி; குறிப்பாக, அத்தியாயங்கள் 14 முதல் 21 வரை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டின; படித்தேன். நாட்டுப் பற்றும், சமூக நீதியிலும், சமுதாய முன்னேற்றத்திலும் அக்கறையுள்ளவர் அனைவரும், நமது வரலாற்றுப் போக்கை நடுநிலையில் நின்று மதிப்பிடுவோர் அனைவரும், தங்கள் கருத்துக்களை முழு மனத்துடன் ஏற்றுக் கொள்வர்; மனமாரப் பாராட்டுவர் என்பது திண்ணம். இந்த ஆய்வுரையை நூலாகத் தொகுத்து வழங்குதல் இன்று மிகமிக அவசியம்; ஒவ்வொரு பள்ளி, கல்லூரி மாணவனும் மாணவியும் இந் நூலைப் படித்துப் பயன் பெற வேண்டும் என்பது என் அவா. ஒரு ரூபாய் விலையில் ஓர் ஆயிரம் பிரதியாவது விற்பனையானால், மிக்க மகிழ்ச்சியடைவேன். தங்கள் நாட்டுப்பற்றும், மனித நேயமும் மிக்க நற்சிந்தனைகள் வாழ்க! வளர்க! வெல்க!

திருநெல்வேலி-6 தி.க. சிவசங்கரன்

● என் ராத்திரித் தூக்கம் போச்சு. ரொம்ப காலமா, சொல்ல நெனச்சு சொல்லப் பயந்த சத்தியத்தெ வெளிச்சத்துக்கு கொண்டு வந்திட்டீங்க. ஒங்க துணிச்சல் இதுவரை எந்தத் தமிலனுக்கும் வல்லே. எப்பவாவது இந்த உண்மைகளெ வீதியிலெ போட்டு ஒடைக்கத்தான் வேணும். இது ரொம்ப வெவகாரங்களெக் கௌப்புமோ, இல்லாட்டி கண்டுக்காமெ கண்ணெ மூடிக்குவானுகளோ தெரியலே. எப்படி ஆனாலும் செரி. செஞ்ச காரம் பெரிசு. ஒரே ஒரு அபிப்பிராய பேதம். அய்யருக வர்றதுக்கு முன்னாடி, தமிழனுக்கு மதம் இல்லெ. அதாவது இவனுக்கு 'மதம்' புடிக்கலே. ஆனா சாமிக இருந்துச்சு. ஐயனார் மாதிரி சொந்த சாமிக. சாமிகளெ சுத்தி ஒரு மதம் இருக்கலெ.

படிப்பகம்

www.padippakam.com



சங்க இலக்கியத்திலயே வடக்கத்தி சாமிக வர ஆரம்பிச்சிருச்சு.

புவியரசு

சென்னை-17

● தலையங்கம் 21 தலைப்புகளாக வெளியிட்டு, தங்கள் ஆராய்ச்சித் திறனை, சிந்திக்கும் ஆற்றலை வெளியிட்டிருந்தீர்கள்.



மதத்தின் பேரால், இதிகாசங்களின் முறையற்ற மாறுபாட்டால், ஆரிய இன வழித் தாக்குதலால், ஆக்கிரமிப்பால் நாடு இனி எந்நிலை எய்தும் என்பதைத் துல்லியமாக, உளத்தெளிவுடன் எழுதிவிட்டீர்கள்.

ஒரு நல்ல ஆய்வு ஏட்டைப் படிப்பது போன்ற உணர்வினை தாங்கள் உருவாக்கி, பகுத்தறிவு நெறிமுறையினுக்கு எருவாக்கி, திராவிட இன எழுச்சிக்கு உயரிய கருவாக்கிப் படைத்திருக்கிறீர்கள்.

மொழி, இனம், கலை, காவியம் இவைகளில் ஆரிய கலாச்சாரம் கொடி கட்டியது, கோடு போட்டது என்பதைத் தங்கள் எழுத்துக் கண்ணாடி தெளிவாகக் காட்டுகிறது. கடவுளின் பேரால், மதத்தின் பேரால், வர்ணாசிரம வக்கிரங்களால், திராவிட இனத்தின் விட்டுக் கொடுக்கும் மனத்தால் ஆரிய சூழ்ச்சி எவ்வாறெல்லாம் வெற்றியடைகிறது என்பதை ஆதார பூர்வமாக விளக்கியுள்ளீர்கள்.

இந்து ராஜ்யம் என்ற ஒன்று உருவானால் என்ன விளைவு ஏற்படும் என்பதை, "என்னைப் போலவே, என் இந்து சகோதரர்கள் தொண்ணூற்றைந்து சதவீதம் பேர் அடிமைகளாக நிரந்தரப்படுத்தப் படுவார்கள்," என்ற தீர்க்க தரிசனத்தை மூர்க்கத்தனமாக ஆதரிப்பவன் நான்.

"வர்ணாசிரம தர்மம் சனாதனிகளின் ஆயிரங்காலத்துப் பயிர்." "நம்பிக்கைத் துரோகம், நயவஞ்சகம், சூழ்ச்சிதான் உன் ராஜதந்திரம்." "ராம நாமத்தை உன் துர்நாற்றம் பிடித்த ஆதிக்க வெறிக்காகக் கேவலப்படுத்துகிறாய்." "காந்தி தேசமாய் அறியப்பட்ட இந்த நாட்டை, கோட்சேயின் தேசமாய்ப் பிரகடனப்படுத்திவிடவா இத்தனை ஆவேசம்?"

—வார்த்தைகளா இவைகள்! அல்ல. ஆரிய ஆதிக்க கோணங்கி மூளைகளுக்கு விழுந்த சம்மட்டி அடிகள்.

"இந்தியா என்பது அந்நியன் திரட்டித்தந்த எள்ளுருண்டை. இந்து மதம், இந்துச் சட்டம் என்பதெல்லாம் நிர்வாக வசதிக்

படிப்பகம்

www.padippakam.com


காக அவன் தைத்துக் கொடுத்த ஒட்டுச் சட்டை. இந்த எள்ளுருண்டை பொடிப்பொடியாய்ச் சிதறிவிடாமல் ஈர்க்கும் வெல்லப்பாகுதான் மதச் சகிப்பும் மனித நேயமும். அதை வெடி வைத்துத் தகர்க்க முயல்வோர்தான் இந்தியாவின் முதல் இராஜத் துரோகி.''— சரியான விளக்கம்; விமர்சனம்; நிதர்சனம்.

சென்னை–14 வண்ணப் பூங்கா வாசன்

● தலையங்கம் கண்டு மகிழ்ந்தேன். அருமையான தலையங்கம். 'அடிப்படையில் நீங்கள் எல்லாம் இந்துக்களல்ல' என்று 1940 களிலேயே ஈ வே ரா பெரியார் அவர்கள் கூறினார்கள். 'இன இழிவுக்கு இஸ்லாமிய மருந்து' என்று அந்தக் காலத்திலேயே அவர்களுடைய நூல்கூட வெளியாயிற்று. தங்களது தலையங்கத்தில், தமிழர்களைப் புரிந்து கொள்வது கடினம் என்பது பெரியார் அவர்களின் வாழ்வையே காட்டிற்று. மிக விரிவாக வர்ணாசிரமத்தைத் தாக்கிக்கொண்டிருக்க வேண்டிய காலம் இதுவல்ல! சமதர்மம் என்பதேகூட நம்மிடையே கனவாகத்தான் இருந்து வருகிறது. இந்து மதம் சவமாகி காலம் பல ஆகிவிட்டது.

நாம் இந்து மதத்தை மறுப்பதற்கு புராணங்களையும் கடவுளர்களையும் தேடிக்கொண்டுபோய் மறுக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, நாம் இனி ஒரு புதிய மதத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமிருந்தாலும்கூட இது சாத்தியமில்லை.

நமக்கு வேண்டுவது ''நிகிலிசம் '' இது வரை வந்து வாழ்ந்திருக்கும் அத்தனையையும் மறுத்தல். அது ஒன்றுதான் வேறு ஒன்று பிறக்க வழி தரும்; அது தமிழே ஆனாலும் சரி. அதன் சப்பு சவர்களை சுமந்துகொண்டு- சாகும் வரை சீழ் வடியும் புண்ணைச் சுமந்துகொண்டிருப்பது கேவலம்.

உங்கள் பழமை யாவும் ஒழியாதெனின், அவைகளிலிருந்து புதியதும் பிறக்காது; பிறந்தாலும் தரிக்காது; தரித்தாலும் வெல்லாது.

தங்கள் முயற்சிகளுக்கு என் வாழ்த்துக்கள்.

தஞ்சாவூர்-1 தஞ்சை ப்ரகாஷ்

● ''என் மதம்- ஒரு மறு பரிசீலனை' படித்தேன். இரண்டாம் முறையாக, இரண்டு இதழ்களிலும் வந்துள்ளதை மொத்தமாகப் படித்தேன். முதல் பகுதி நடுநிலை நின்று நல்ல சிந்தனைக் கனத்தோடு எழுதியிருக்கிறீர்கள். இரண்டாம் பகுதி உணர்ச்சி வசப்பட்டு எழுதியதாகத் தோன்றுகிறது.

மதவாதிகள் மத ரீதியான ஆட்சி அமைக்க ஆசைப்படுகிறார்கள். அவர்கள் கை வலுத்து வருகிறது. பம்பாயில் சிவ சேனை அட்டூழியங்களே சான்று. அமைதியாக இருந்த தமிழ் நாட்டில் சில வருடங்களாக முளைத்துத் தலை தூக்கும் பிள்ளை

படிப்பகம்

www.padippakam.com



யார் சதுர்த்தி சமயக் கலவரங்களும், பெருகி வருகிற பிள்ளையார் பொம்மைகள்(பூதாகார உருவங்கள்) போன்றனவும் சாட்சியாகும்.

மத ரீதியான ஆட்சி அமைக்கப்பட்டால் நாட்டின் நிலை என்னவாகும் என்று நீங்கள் தெரிவிக்கும் அச்சம் நியாயமானதே. நீண்ட கட்டுரை நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

மதங்களை ஒழுங்காக அனுஷ்டிப்பவர்கள் மிகக் குறைவு. ஆனாலும் மதநம்பிக்கைகள், மதவெறி மக்களிடையே அதிகமாக உலாவுகிறது. உள்ளார்ந்து கிடக்கும் இந்த வேகத்தை அரசியல்வாதிகளும் சுயநலமிகளும் தங்களுக்கு சாதகமாகத் தூண்டிவிட்டு நாசங்களை விளைவிப்பதும் சாத்தியமாகிறது.

சென்னை–5 வல்லிக்கண்ணன்

● தலையங்கம் கருத்தாழம் மிக்கது என்று வெறுமனே சம்பிரதாயத்திற்குச் சொல்லி ஒதுங்க முடியாது. ஏனெனில் பிரச்சனை விஷய கனம் மிக்கது.

என்னைப் பொறுத்த மட்டில் அறிவியலையே மதமாக்கிடவும், அதுவே ஆன்மிகமாகும் என்பதனையும் வலியுறுத்த முயல்கிறேன். அரசியல் பிரக்ஞை வளர்ந்த அளவுக்கு நம் நாட்டில் அறிவியல் பிரக்ஞை வளரவில்லை. தொழில் நுட்பம் வளர்ந்துள்ள மேலை கீழை நாடுகளின் நிலை வேறு.

ஏதாயினும், தங்களது தலையங்கத்தைப் படித்தவுடன், கவியரசர் கண்ணதாசனின் 'செப்பு மொழி' ஒன்று நினைவுக்கு வருகிறது.

''காந்திஜி ஒரு ராம ராஜ்யத்தைக் கனவு கண்டார்.
இன்று, ஏராளமான மனிதர்கள் இந்த ராம ராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.
குரங்குகள் இல்லாமல் ராம ராஜ்ஜியம் ஏது?

தவிர தாங்கள் குறிப்பிட்டுள்ளபடி ''ஆரிய மரபணுக்களை அதிகச் சேதாரமில்லாமல் தக்க வைத்துக் கொண்டுள்ள அநேகம் பேர் இஸ்லாத்திலும் ஏசு மதத்திலும்தான் இருக்கிறார்கள்'' என்கிற கருத்து எனது அறிவியல் சிந்தனையோடு ஒத்துப்போகின்றது.

புவி வரலாற்றியல் (Geology), மரபியல் (Genetics), பரிணாமவளர்ச்சி (Evolution), மொழியியல் (Linguistics) எனப் பல்வேறு அறிவியல் துறைகளின் ஒருங்கிணைந்த கோட்பாடுகள் வழி சிக்கலை ஆராய்ந்தால் இந்திய மண்ணில் சொந்தமாக, சுதந்திரமாகத் தோன்றி வளர்ந்த முதல் இனம் திராவிடம் என்று அடித்துச் சொல்லலாம்.

திருவனந்தபுரம் நெல்லை சு.முத்து

**அடுத்த இதழிலும் சொல்ல கொஞ்சம் உண்டு.**

படிப்பகம்

www.padippakam.com

சிதையில் கிடத்தி தேசத்தின் மேனிக்குத்
தீ மூட்டுவதில்தான் எத்தனை மகிழ்ச்சி
இந்தப் பொம்மைகளுக்கு!


பிறைகளாய் சிதைக்கப்பட்டன
பௌர்ணமிகள்.

சிலுவை மரம் செய்யப் பல மரங்கள்
வேரோடு வெட்டி வீழ்த்தப்பட்டன.

கருவிகளுக்கான இரும்பு,
ஆயுதங்களாய் அவதாரம் பூண்டன,
ராமன் என்றும், ஏசு என்றும்
நபி என்றும் வேடம் புனையும்
பொம்மைகளுக்காக.

ஒரு விடியலுக்கான
அருணோதயக் கிரணங்கள்
பொம்மைகளின் கருவறையில்
சபிக்கப்பட்ட அகல்களாய்.

ரத்தக் கங்கையில் புனலாடிப் புளகமுறும்
இப் பொம்மைகள் தரிசனத்தில்
பாசன நதிகளும் பயந்து வறண்டன.



அடடா! என்ன பக்தி!
தான் வெயிலில் கருகினாலும்
பொம்மைகளுக்குக்
குடைபிடிக்கும் இந்தியன்.

பொம்மைகளுக்குப் பாலாபிஷேகம் செய்ய,
பசியில் கதறும் குழந்தையைப் புறந்தள்ளி,
மனைவியின் மார்புகளில்
பால் கறக்கிறான் பாரத புத்திரன்.

பொம்மைகளின் நிர்வாணம் மறைக்க
இவன் நிர்வாணமாய் நிற்கிறான்.

தேசத்தின் சகல திசைகளிலும்
பொம்மைகளின் ஆக்ரமிப்பு.

விஞ்ஞானச் சிறகுகள் பொருத்தி,
வேற்று கிரகங்களில் நுழையும் மனிதன்
பொம்மைகளுக்கு முன்னே
பலிபீட ஆடாய்...

ஆம்!
இப்போது தேவை ஒரு புதிய மனிதன்:
இந்தப் பொம்மைகளிடமிருந்து
மானுடத்தை மீட்க.

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, March 1993. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY in TAMIL R. Dis. 5479/90

# ADVERTISEENT TARIFF

| | |
|---|---|
| Back Cover (Black & White) | Rs. 1 - |
| Cover inside I & II each | „ 1000/- |
| Full Print Page | „ 750/- |
| Half Page | „ 400/- |

Add 50 % for each additional colour upto 3 colours.

## MECHANICAL DATA

| | |
|---|---|
| Overall Size of the Monthly: | 21.5 cm X 14 cm |
| Print Area: | 17.5 cm X 10.5 cm |
| Printing Process: | Letter Press |
| Material preferred: | Matter to be composed & Blocks |

Your Advertisement in our Monthly is one step forward to help spread Creative Literature in good harmony.

சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்